விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 01 வெள்ளிக்கிழமை (17.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 272

## குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் எம்.பி பதவியையும் வகிக்க முடியாது

### லொஹான் குறித்து சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு சிறைச்சாலைகளில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நடந்துகொண்டதாகக் கூறப்படும் நடவடிக்கைகள் மிகவும் குற்றமானவை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) வலியுறுத்துகிறது.

இதுபோன்ற கொடூரமான செயல்கள் சட்டத்தின் ஆட்சிக்கு கடுமையான அச்சுறுத்தலாகும் என்று அதன் 15

21ஆம் திகதிக்கு பின்னர்

## ஊரடங்கு தொடர்பில் இன்று தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பின்னர் தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று இடம்பெறவுள்ள 15

## கொரோனா 2,271

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 2,271 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 15

தமிழ் அரசியல் கைதிகளுக்கு மறுவாழ்வு

# சமூகத்தில் இணைப்பதை நான் கவனித்துக் கொள்வேன்



## அநுராதபுரம் சிறை சென்று நாமல் உறுதி

(கொழும்பு)

**தமிழ் அரசியல் கைதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுவதோடு அவர்களை சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பதனை நான் கவனித்துக் கொள்வேன் என அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற அமைச்சர் நாமல் அரசியல் கைதிகளிடம் உறுதியளித்துள்ளார்.**

அநுராதபுரம் சிறையில் உள்ள கைதிகளை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று பார்வையிட்டார்.

சிறைச்சாலை முகாமைத்துவ முன்னாள் 15

கோவிட் தொற்றால்

## நாட்டில் மேலும் 118 பேர் பலி

(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 118 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் 15

## தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று விடுதலை

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலை செய்யப்பட்டவர் நடேசு குகநாதன் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

அவர் முல்லைத் 15

சிறைச்சாலை சம்பவம்

## பொலிஸ்மா அதிபருக்கு விசாரணை நடத்த பணிப்பு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டை உடனடியாக விசாரிக்குமாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் டாக்டர் சரத் வீரசேகர, பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிர 15

கொரோனாவால்

## மேலும் ஒரு வைத்தியர் உயிரிழப்பு

(கொழும்பு)

கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் பணியாற்றிய வைத்தியர் 15

## காங்கேசன்துறை வீதியோரம் வீழ்ந்து கிடந்தவர் உயிரிழப்பு

### கொலை என உறவினர்கள் தெரிவிப்பு பொலிஸ் விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பிரதான வீதியில் சுயநினைவற்று வீழ்ந்து கிடந்த இளம் குடும்பத் தலைவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். 15

வடக்கில் செப்ரெம்பர் 1- 15ஆம் திகதிவரை

## 225 பேர் கோவிட் தொற்றால் பலி 6,667 தொற்றாளர்கள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று முன்தினம் 200 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 15 நாட்களில் வடக்கு 15

## பருத்தித்துறையில் உயிரிழந்தவருக்கு

### பரிசோதனையில் தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் உயிரிழந்த 73 வயது முதியவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 15

## புலிகளைக் கண்டு அஞ்சிய லொஹான் துப்பாக்கியை காட்டி மிரட்டுகிறார்

### சரத் பொன்சேகா விமர்சனம்



(கொழும்பு)

முன்னொரு காலத்தில் விடுதலைப் புலிகளின் பெயரைக் கேட்டாலே அஞ்சிப் பதுங்கிய லொஹான் ரத்வத்த, இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் களின் தலையில் துப்பாக் 15

கொரோனா

| | |
|---|---|
| யாழ். | - 26 |
| வடக்கு | - 48 |

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 26 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 48 பேருக்கு கொரோனாத் தொற்று 15

# கைதிகள் அச்சுறுத்தல் விவகாரம் சிறைச்சாலை ஆணையாளரின் கீழ் உள்ளக விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த உள்ளிட்ட குழுவினர் வெலிக்கடை, அநுராதபுரம் ஆகிய சிறைகளுக்கு சென்று முறையற்ற விதத்தில் நடந்துகொண்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்கள மட்டத்திலும் விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவின் ஆலோசனைக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி வெலிக்கடை, அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பூரணமாக இவ்விசாரணையில் ஆராயப்படும் எனவும் இதற்காக சிறைச்சாலைகள் ஆணையாளர் (விநியோகம்) சுனில் கொடித்துவக்கு எனும் அதிகாரியை விசாரணை அதிகாரியாக நியமித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இரு சிறைச்சாலைகளிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் அவர் பூரண விசாரணை ஒன்றினை முன்னெடுத்து சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பார் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டார். (ம-03)

# கொரோனா தொற்றால் உப பொலிஸ் பரிசோதகர் பலி

(கொழும்பு)

ஹவுங்கல்ல பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றி, ஓய்வூதியத்திற்கு முந்திய விடுமுறையில் இருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கோவிட் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

எல்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்த குறித்த நபர் ஊரகஸ்மங்ஹந்திய தேவத்த பகுதியைச் சேர்ந்த 59 வயதானவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நீரிழிவு மற்றும் உயர் குருதி அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-03)

நெல்லியடியில் கடைக் கட்டடம் விற்பனைக்கு

நெல்லியடிச் சந்திக்கு அருகாமையில் மேல்மாடியுடன் கூடிய கடைக் கட்டடம் விற்பனைக்குண்டு.

076 576 8514

(C-2665)

# சிறைச்சாலை சம்பவம்; சி.ஐ.டியில் முறைப்பாடு

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்த முன்னாள் இராஜாங்க அமைச்சரும் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சருமான லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக நேற்று சி.ஐ.டியில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

சி.ஐ.டியின் 1 ஆம் இலக்க தகவல் புத்தகத்தில் பதியப்பட்டுள்ள இந்த முறைப்பாட்டை, சி.ஐ.டி. பொலிஸ் கான்ஸ்டபிள் (30905) ஸ்ரீயனித்த பதிவு செய்துள்ளார். கடந்த 12 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலையில் குடிபோதையில் ஆயுதத்துடன் சென்று, அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக உடன் விசாரணைகளை ஆரம்பித்து, கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு சட்டத்தரணி சேனக பெரேரா தனது முறைப்பாட்டில் கோரியுள்ளார்.

அன்றைய தினம் சிறையில் இடம்பெற்ற சம்பவங்களை மூடி மறைக்க சிறைச்சாலை அதிகாரிகளும் உடந்தையாக செயற்பட்டுள்ளதாக தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணி சேனக பெரேரா, அது தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க ஆகியோர் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அவர் கோரியுள்ளார்.

அதேநேரம் அநுராதபுரம் சிறையில் உள்ள CCTV காட்சிகள் அழிக்கப்படும் அபாயம் காணப்படுவதால் அது தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறும் சி.ஐ.டியிடம் முறைப்பாட்டாளர் கோரியுள்ளதாக அறிய முடிகின்றது. (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்



## புஸ்பலீலா விஜயரத்தினம் (கலா)

மலர்வு : 03.06.1960 உதிர்வு : 15.09.2021

சுரணவாய் அண்ணாசிலையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பலீலா விஜயரத்தினம் நேற்று முன்தினம் (15.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நேசம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சோதி தம்பதியரின் அன்பு மருமகளும் விஜயரத்தினத்தின் பாசமிகு மனைவியும் பிறேமிளா, பிறேமதர்சினி, யோகேஸ்வரன் ( ஆங்கில ஆசிரியர் - மு/தென்னியன்குளம் அ.த.க. பாடசாலை), பிரியங்கா (முகாமைத்துவ உதவியாளர் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ரவீந்திரன், நிமலதீபன், ராதை, பிரதீஸ் (சித்து - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சின்னம்மா, பூரணம் (அன்பு), ஜெயரட்ணம், சிவசோதி (ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நஸ்மிதா, சர்வினா, கம்சிகா, பவனீதன், நிபிதன், நிபிசானா, சித்தார்த், அக்சய், ஆத்விக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இரத்தினம், இராசையா (ஓய்வுநிலை மேலதிக கல்விப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு), காலஞ்சென்றவர்களான தவமணி, பாலசிங்கம், பரமானந்தம் (ஓய்வுநிலை முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி), காலஞ்சென்ற மாசிலாமணி, உதயநாதன், நாகநாதன், பாக்கியநாதன் (ஜேர்மனி), சந்திரலீலா, ஜானகி, தியாகராசா, காலஞ்சென்ற தர்மரத்தினம், தவமலர், சிறீதர், சிறீரஞ்சனி, தர்மராசா, குணராசரத்தினம், சிவபாதம், உதயராணி, இராசேந்திரம், தெய்வேந்திரம், இந்திராதேவி, சிறீரஞ்சினி (விஜயா), காஞ்சனா (பிரான்ஸ்), மோகனா, சிலோசனா, சிவகுமார் (பிரான்ஸ்), கல்பனா (சுவிஸ்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் சுமத்திரா, சுமத்திரன் (டோகா), சுகிர்தன் ஆகியோரின் மைத்துனியும் மாணிக்கத்தின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை (18.09.2021) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2666)

தகவல்:
அண்ணாசிலையடி,
சுரணவாய்.
076 745 6374
ந.விஜயரத்தினம்
(கணவன்)

# நாட்டை முழுமையாகத் திறந்தால் இன்னுமொரு அலைக்கு முகம்கொடுக்க நேரிடும்

## விசேட வைத்திய நிபுணர்கள் கூட்டாக எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டை முழுமையாகத் திறக்கும் அளவுக்கு ஆரோக்கியமான மட்டத்தை நாம் இன்னமும் அடையவில்லை. இப்போதும் நாட்டில் டெல்டா வைரஸ் தொற்று வேகமாகப் பரவிக்கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் கட்டுப்பாடுகள் இல்லாது நாட்டைத் திறந்தால், மிக மோசமான இன்னொரு கொவிட் வைரஸ் அலைக்கு முகம்கொடுக்க நேரிடும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் விசேட வைத்திய நிபுணர்கள் நேற்று முன்தினம் கூட்டாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

பலவீனமான சுகாதாரக் கட்டமைப்பு காரணமாக நாட்டில் தென்னாபிரிக்க வைரஸ் பரவ அதிக வாய்ப்புகள் உள்ளன எனவும் விசேட வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

'நாடு இன்னமும் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலில் இருந்து விடுபடவில்லை.

ஒவ்வொரு நாளும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

ஒரு வாரத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமான வைரஸ் தொற்றாளர்களும், ஆயிரம் அல்லது ஆயிரத்தையும் தாண்டிய வாராந்த கொவிட் மரணங்களும் இன்னும் நாட்டில் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில். இது சாதாரண நிலைமை அல்ல. நாம் இப்போது கட்டுப்பாடுகள் இல்லாது செயற்பட முடியும் என்றோ அல்லது நாடு தற்போது எச்சரிக்கை மட்டத்தில் இருந்து விடுபட்டுள்ளது என்றோ எம்மால் ஒருபோதும் கூறிவிட முடியாது.

நாம் இப்போதும் சிவப்பு எச்சரிக்கை மட்டத்திலேயே உள்ளோம்' எனவும் விசேட வைத்திய நிபுணர்கள், ஜனாதிபதியிடம் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-5)




இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதற்கு அமெரிக்காவினால் 40 மில்லியன் டொலர் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

### தொடரும் பதவி விலகல்கள்

## மியன்மாருக்கான இலங்கை தூதுவர் பேராசிரியர் நளிந்த ராஜினாமா

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கான இலங்கை தூதுவர்கள் தொடர்ச்சியாக பதவி விலகி வரும் நிலையில் மற்றுமொரு தூதுவரும் பதவி விலகியதுடன் நாட்டிற்கும் திரும்பியுள்ளார்.

இதன்படி மியன்மாருக்கான இலங்கைத் தூதுவராகப் பதவிவகித்த பேராசிரியர் நளிந்த டி சில்வா தனது தூதுவர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறு பதவி விலகிய அவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை நாடு திரும்பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்சமயம் அவர் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றார்.

இதேவேளை அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதவராக 9 மாதங்களாக கடமையாற்றிய பிரபல இராஜதந்திரி ரவிநாத் ஆரியசிங்க அண்மையில் இராஜினாமா செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)



தியாக தீபம் திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நினைவு நாளான நேற்று முன்தினம் பிரான்சில் வணக்க நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

## சீனி இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

சீனி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகளுக்கான ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சென ரத் நிவுன்ஹெல்ல தெரிவித்தார்.

சீனி இறக்குமதிக்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நிதி அமைச்சினூடாக அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சீனி இறக்குமதிக்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதனால் அதிக விலையில் சீனி விற்பனை செய்யப்பட்டமையால், சீனிக்கான கட்டுப்பாட்டு விலையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது கையிருப்பிலுள்ள சீனி, எதிர்வரும் இரண்டரை மாதங்களுக்கான நுகர்விற்கு போதுமானது என கூட்டுறவு மற்றும் நுகர்வோர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார். (நி-5)

**NOTICE**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT(AHEAD) OPERATION**

POST OF TECHNICAL ASSISTANT (FULL TIME)
– ON CONTRACT BASIS – 01 VACANCY

POST OF PROJECT ASSISTANT (FULL TIME)
– ON CONTRACT BASIS – 01 VACANCY

The University of Jaffna , Sri Lanka will entertain applications for the above mentioned posts under OTS - AHEAD Operation from suitably qualified persons up to 30.09.2021.

Applicants are requested to visit Jaffna University website www.jfn.ac.lk for further details.

Registrar

(C-2664)

# சம்பியன் லீக்; ரியல் மட்ரிட், லிவர்பூல், மன்செஸ்டர் அணிகள் வெற்றி

ஐரோப்பாவின் முன்னணி கால்பந்து கழகங்களுக்கிடையில் நடைபெறும் முதன்மையான கால்பந்து லீக் தொடரான சம்பியன்ஸ் லீக் தொடரின், முதற்கட்ட போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

குழு டி பிரிவில் நடைபெற்ற போட்டியொன்றில், ரியல் மட்ரிட் அணியும் இன்டர் மிலான் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

சேன் சிரோ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், ரியல் மட்ரிட் அணி 1-0 என்ற




கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் ரியல் மட்ரிட் அணி சார்பில், ரொட்ரிகோ போட்டியின் 89 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

குழு ஏ பிரிவில் நடைபெற்ற போட்டியொன்றில், பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியும் ப்ருஜ் அணியும் மோதின.

ஜோன் ப்ரெய்டெல் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதில் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி சார்பில், ஆண்டர் ஹெர்ரா 15 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். ப்ருஜ் அணி சார்பில், ஹென்ஸ் வனகென் போட்டியின் 27ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

குழு பி பிரிவில் நடைபெற்ற போட்டியொன்றில், லிவர்பூல் அணியும் ஏசி. மிலான் அணியும் மோதின.

என்பீல்ட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், 3-2 என்ற கோல்கள் கணக்கில் லிவர்பூல் அணி வெற்றிபெற்றது. (4-6)

# ஐ.பி.எல்.போட்டியை பார்வையிட ரசிகர்களுக்கு அனுமதி



ஐ.பி.எல். 2021 சீசன் இந்தியாவில் நடைபெற்றது. கொரோனா 2 ஆவது அலை உச்ச நிலையை அடைந்த போது போட்டி நடைபெற்றதால் ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. பாதிஆட்டங்கள் முடிந்த நிலையில் பாதுகாப்பு வளையத்தையும் மீறி வைரஸ் தொற்றால் வீரர்கள் பாதிக்கப்பட்டனர்.

இதனால் ஐ.பிஎல். தொடர் ரத்து செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

மீதமுள்ள ஆட்டங்கள் ஐ.பி.எல். 2021 சீசன் 2 ஆவது பகுதியாக ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்படவுள்ளது.

முதல் ஆட்டம் வருகிற 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் மும்பை இந்தியன்ஸ்- சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்த நிலையில் நாளையில் இருந்து போட்டிகளை ரசிகர்கள் நேரில் கண்டுகளிக்க ஐ.பிஎல். அதிகாரப்பூர்வ இணையதளத்தில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து கொள்ளலாம் என ஐ.பிஎல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

துபாயில் 13 ஆட்டங்களும், ஷார்ஜாவில் 10 ஆட்டங்களும், அபு தாபியில் 8 ஆட்டங்களும் நடைபெற இருக்கின்றன.(4-6)

# டெஸ்ட் ரத்திற்கு முன் இமெயில் அனுப்பிய விராட்





5-வது டெஸ்ட்போட்டி ரத்து செய்யப்படுவதற்கு முன்பு நள்ளிரவில் விராட்கோலி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு இமெயில் அனுப்பினார் என்று இங்கிலாந்து முன்னாள் கப்டன் டேவிட் கோவர் குற்றம் சாட்டி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறும் போது, 'கடைசி நேரத்தில் போட்டியை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்பதற்காக விராட் கோலி இந்த இமெயிலை நள்ளிரவில் அனுப்பினார்' என்று அவர் கூறியுள்ளார். (4-6)

# கரீபியன் பிரீமியர் லீக்

## சென்.கிட்ஸ்நெவிஸ்பெட்ரியோட்ஸ் அணி சம்பியன்

கரீபியன் பிரீமியர் லீக் இருபது-20 தொடரின் ஒன்பதாவது சீசனில் சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணி முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

சென்.கிட்ஸ் மைதானத்தில் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், சென். கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணியும் செயின்ட் லூசியா கிங்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற செயின்ட் லூசியா கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய செயின்ட் லூசியா கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கோர்ன்வோல் மற்றும் ரொஸ்டன் சேஸ் ஆகியோர் தலா 43 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.




சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணியின் பந்துவீச்சில், பவாட் அஹமட் மற்றும் நசிம் ஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் பெபியன் அலென், டோமினிக் ட்ரேக்ஸ் மற்றும் ஜோன்-ரஸ் ஜகேசர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 160 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென். கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால்சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணி, 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று முதல் சம்பியன் கிண்ணத்தை வென்றது. சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரி யோட்ஸ் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டோமினிக் ட்ரேக்ஸ் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும் ஜோசுவா டி சில்வா 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

செயின்ட் லூசியா கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், வஹாப் ரியாஸ் 2 விக்கெட்டுகளையும் ரொஸ்டன் சேஸ், அல்சார்ரி ஜோசப், டேவிட் வெய்ஸ் மற்றும் கெஸ்ரிக் வில்லியம்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 1 விக்கெட்டினையும் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்ட டோமினிக் ட்ரேக்ஸ் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் நாயகனாக செயின்ட் லூசியா கிங்ஸ் அணியின் ரொஸ்டன் சேஸ் தெரிவுசெய்யப்பட்டார். (4-6)

## இராசிபலன்

17.09.2021
புரட்டாதி 01, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முற்பகல் 9.14 மணிவரை
திருவோணம் பின்னிரவு 5.10 மணிவரை
சுபநேரம் 06.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சந்திராஷ்டமம்: திருவாதிரை,
பரிவர்த்தன ஏகாதசி விரதம்

வள்ளுவன்

**மேஷம்** — வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், திடீர் பயணங்கள் இடம்பெறலாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், ஆன்றோர் சந்திப்புண்டு.

**மிதுனம்** — எந்த காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, வேலைச்சுமை கூடும், ரோக பயமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** — நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தொழில் அதிபர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**சிம்மம்** — எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** — நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** — செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** — சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், விரதம் வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு** — செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்த சேரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்** — ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல்கள் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**கும்பம்** — சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மீனம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அதிஷ்டகரமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

உன் இன்பமும் துன்பமும் உனது கையில் இருக்கிறது

# மன்னாரில் கனிய எண்ணெய் வளம் தொடர்பில் தரவு சேகரிப்பு

(கொழும்பு)

**மன்னார் மற்றும் காவிரி பள்ளத்தாக்கில் கனிய எண்ணெய் வளம் தொடர்பான ஆய்வுகளுக்காக முதற்தடவையாக விமானங்களைப் பயன்படுத்தித் தரவுகளை சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட பிரபல ஆய்வு நிறுவனத்தின் ஊடாக குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கனிய எண்ணெய் காணப்படக்கூடிய பகுதிகள் 20 ஆக பிரிக்கப்பட்டுள்ளதுடன், அதில் ஒரு பகுதியை தனியார் நிறுவனமொன்று நீண்டகாலம் ஆய்வு செய்வதாகவும், அதற்காக அதிக பணம் செலவிடப்படுவதாகவும் அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் குறித்த 20 பெரும் பகுதிகளையும் 837 அலகாக பிரித்து புதிய வரைபடத்தை தயாரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வரைபடத்திற்கு அமைய தரவுகளைச்சேகரிப்பதற்காக விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (நி-5)

# சினிமா பாணியில் திட்டம் விசாரணையில் அம்பலம்

(கொழும்பு)

நாரஹேன்பிட்டி பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் கைக்குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர் வாக்குமூலம் அளித்ததில் இரகசிய திட்டம் அம்பலமானது.

கைக்குண்டை வைத்தநபரே, கைக்குண்டு உள்ளமை தொடர்பான தகவலையும் வழங்கியுள்ளார். தகவல் வழங்கியமைக்காக வழங்கப்படும் பணத்தொகையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே, இந்த திட்டம் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

நாரஹேன்பிட்டி பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை கைக்குண்டொன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இலங்கை-காரைக்கால் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து



(கொழும்பு)

இலங்கை மற்றும் காரைக்கால் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பது தொடர்பில் புதுச்சேரிமுதலமைச்சர் என்.ரங்கசாமியுடன் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் மற்றும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு கண்டு, நல்லுறவை வளர்ப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் புதுச்சேரிமீனவளத்துறை மற்றும் போக்கு வரத்துத்துறை அமைச்சர்களும் அரச உயர் அதிகாரிகளும் பங்கேற்றிருந்ததாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன. (நி-5)

# சித்த வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கி கொவிட் கட்டுப்படுத்தலில் இணையுங்கள்

(கொழும்பு)

கொவிட்டை சுதேச வைத்தியத்தின் மூலம் கட்டுப்படுத்த 1,000 வைத்தியர்கள் தயாராக உள்ளதாக வேலை வாய்ப்பற்ற சித்த வைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹபில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும், ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய துறைகளில் பட்டம் பெற்று உள்ளக பயிற்சிகளை நிறைவு செய்த 1,000 வைத்தியர்கள் கடந்த 2017ஆம் ஆண்டில் இருந்து அரச நியமனம் கிடைக்காமல் வேலை வாய்ப்பற்ற நிலையில் வீட்டில் இருக்கும் துர்ப்பாக்கிய நிலை நம் நாட்டில் மட்டும் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

தற்போதைய கொவிட் இடர் காலத்தைக் கருத்தில் கொண்டு சுகாதாரத்துறையை வலுப்படுத்த வேலையற்ற சுதேச வைத்தியர்களுக்கு அரச நியமனம் வழங்கி கொவிட் சிகிச்சை நிலையங்களில் சேவையாற்ற வழி செய்வதே அரசின் புத்திசாலித்தனமான தும் ஆரோக்கியமானதுமான முடிவாகும் என நினைக்கிறேன்.

மேலும் இது தொடர்பாக பல முறை பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை.மாறாக அனேபதிதுறையில் உள்ளகபயிற்சியைத்தொடங்காத மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பது மிக்க வேதனை அளிக்கிறது.

நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இலவசக் கல்வியைக் கற்று சுகாதாரத்துறையில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்களாகிய எமக்கு உடனடியாக அரச நியமனம் வழங்கி நாட்டு மக்களுக்கு புத்துணர்ச்சியுடன் சேவையாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். (நி-5)

# ஆட்சி ஏறும் அரசாங்கமெல்லாம் தமிழருக்கு துரோகம் இழைக்கின்றன

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டின் மிக மோசமான குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் நபர் ஜனாதிபதியே என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் இடம்பெற்ற இணைய வழியிலான ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இன்றைய அவல நிலையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெயரில் பெரும்பாலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தம்மை அடையாளப்படுத்தி மோசமான குற்றவாளியை விசாரிக்கும்படி அனுமதி அளித்துள்ளது.

ஜனாதிபதிகோட்டபாயாவின் கருத்துக்கள் ஒன்றும் புதிதல்ல அண்மையில் அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் குடும்பங்களுக்கு ஒரு தெளிவான செய்தியை சொன்னார். அதாவது காணாமலாக்கப்பட்டவர்கள் எப்படி காணாமலாக்கப்பட்டனர் என்ன நடந்தது அதற்கு யார் குற்றவாளியார் பொறுப்பு என்ற விடயம் அனைத்தையும் தேடுவதைக் கைவிடும்படி ஜனாதிபதி கூறி உள்ளார். இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த நாட்டின் ஜனாதிபதி மிகப் பெரும் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் நபர் அவர் தானாகவே கூறியுள்ளார். பொறுப்புக்கூறல் விடயத்தை மறக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றி தொடர்ந்தும் அவர்களின் அவலங்களை தொடர வைக்கும் அளவுக்கு மோசமான செயல் இது.

கோட்டபாயாவுக்கு முன் இருந்த அரசுகளும் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தனர். காணாமலாக்கப்பட்ட அனைவரும் இறந்து விட்டனர் எனக் கூறி உண்மைகளைக் கண்டறியும் செயலிலிருந்து அனைவரும் விடுபட வேண்டும் என்றனர். தமிழ் மக்கள் மீதான பொறுப்புக்கூறலுக்கு எதிரான மிக மோசமான அவல நிலைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளனர் என தெரிவித்தார். (4-7-33)



'விதைகள் உறங்குவதில்லை' எனும் தொனிப்பொருளில் வடமராட்சிக் கிழக்கு முள்ளியான் கடற்கரைப்பகுதியில் ஆயிரம் பனை விதைகள் நாட்டப்பட்டுள்ளன. வடமராட்சிக்கிழக்கு இளைஞர் பேரவை மற்றும் தமிழர் தேசம் அமைப்பினாலேயே இவ்விதைகள் நாட்டப்பட்டுள்ளன. (படம் : சுபதசங்கரி)

# மூத்த சிறுகதை எழுத்தாளர் நந்தினி சேவியர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

சிறுகதைத் துறையின் ஊடாக புகழ்பெற்று விளங்கிய இலங்கையின் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் தமது 72 ஆவது வயதில் திருகோணமலையில் காலமானார்.

கடந்த சில நாட்களாக காய்ச்சல் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று காலை காலமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவிலை பிறப்பிடமாக அவர் தமது ஆரம்ப கல்வியை மட்டுவில் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை, மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வதிரி திரு இருதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார்.

இதனையடுத்து அவர் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்றார்.

1967 ஆம் ஆண்டு எழுத்துத் துறையில் தடம்பதித்த அவர் கவிதை, சிறுகதை, நாவல், பத்தி, விமர்சனக்கட்டுரை ஆகிய துறைகளில் தமது ஆளுமையைச் செலுத்தியுள்ளார்.

2012 ஆம் ஆண்டிலிருந்து "தரம் 10 தமிழ்மொழியும் இலக்கியமும்" என்ற பாடநூலில் "நந்தினிசேவியர் சிறுகதைகள்" என்ற முருகையனின் கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளது. (4-7)

# வட்டுக்கோட்டையில் திடீர் சுற்றிவளைப்பு நான்கு பேர் பொலிஸாரால் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிட்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது யாழ் மாவட்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிலியனகேயின் இன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலைய பிரிவுகளிலும் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ள பணிப்புரை விடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பில் முகக்கவசம் அணியாத ஒருவரையும், பயணத் தடையை மீறிய ஒருவரையும், போக்குவரத்து விதிமுறைகளை மீறிய இருவரையும் போலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இன்று 17ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7-104)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 60 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள தாதியர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இடத்தில் நடைபெற்றது. (படம் : மகாலிங்கம்)



சோனப்பு கிழக்கு மயானப் பகுதியில் இருந்து குயிலங்கண்டி வரையான பகுதி வரை உள்ள குப்பைகள் மற்றும் கருவேலங்கன்றுகளை அகற்றி மந்தை மேய்ச்சல் தரையாக பயன்படுத்தக்கூடியவாறு செப்பனிடும் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது. (படம் : மகாலிங்கம்)

# இணையவழி கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

நூலக நிறுவனத்தின் இணையவழி நிகழ்ச்சித் தொடரில் 16 ஆவது நிகழ்வாக "இயற்கை மரபுரிமைகள் ஆய்வும் ஆவணமாக்கமும்: நில ஆவணப்படுத்தலில் புவியிடத்தொழில்நுட்பத்தின் பிரயோகம்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நூலக நிறுவன ஆளுகைச் சபை உறுப்பினர் சாரதாஞ்சலி மனோகரனின் ஒழுங்கிணைப்பில், கிழக்குப் பல்கலைக்கழக புவியியற் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான இராஜரெட்ணம் கிருபராஜா வளவாளராக கலந்துகொள்ளவுள்ளனர். (Join Zoom Meeting https://us02web.zoom.us/j/81415584070, Zoom meeting ID - 8141 5584070) (4-7-33)




# தென்மராட்சி வரணியில் வெடிபொருட்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி-வரணி குடமியன் பகுதியில் உள்ள காணியொன்றில் இருந்து வெடிக்காத நிலையில் கிளைமோர் உள்ளிட்ட சக்திவாய்ந்த வெடிபொருட்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கொடிகாமப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிஸார் வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (4-7-30-33)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் குப்பிழான் சொக்கவளவு அருள்மிகு அங்கயற்கண்ணி உடனாய திருவாலவாயார் திருக்கோவிலின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது.(4-7)

# சிறைச்சாலைச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து விசாரிக்க வேண்டும்



**சுமந்திரன் எம்.பி.**

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மதபோதையில் சென்ற சிறைச்சாலை ராஜாங்க அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்த கைதிகளை முழந்தாளிடச்செய்து, தலையில் துப்பாக்கி வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதிசட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஒரு அமைச்சிலிருந்து மட்டும் லொஹான் ரத்வத்த இராஜினாமா செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலை கைதிகள் துன்புறுத்தல் விவகாரத்துக்கு உள்நாடு மற்றும் சர்வதேச மட்டத்தில் இருந்து கடும் கண்டனங்களை எழுந்ததை அடுத்து சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார். ஜனாதிபதியும் அவருடைய இராஜினாமாவை ஏற்றுள்ளார். எனினும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண இராஜாங்க அமைச்சராக அவர் தொடர்ந்து செயற்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே ஒரு அமைச்சுப் பொறுப்பில் இருந்து மட்டும் லொஹான் ரத்வத்த இராஜினாமா செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என சுமந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார். அனைவரும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-5)

# உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்க்க வெளிப்புறப் பொறிமுறை அவசியமில்லை

**பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே**

(கொழும்பு)

நாட்டின் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, வெளிப்புறப் பொறிமுறையொன்றின் தேவை ஒருபோதும் இல்லையென, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

அதேபோன்று, அவ்வாறான பொறிமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் உள்ளக சட்டக் கட்டமைப்பின் கீழ், நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தால் ஏற்பாடு செய்யப்படும் ஊடகசந்திப்பு, நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட போது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பயங்கரவாதத்தை ஒழித்தல், அடிப்படைவாதத்தைப் பரப்பும் தீவிரவாதத்தை ஒழித்தல் போன்றே, நாட்டு மக்களிடையே சமாதானம் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது, சீரமைக்கப்பட்ட கொள்கையாகும் என்று எடுத்துரைத்த வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர், அந்தக் கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டு, அதிகாரப் போட்டிகளில் சிக்கிக்கொள்ளாது முன்னோக்கிநகர்வதே இலங்கையின் நோக்கமென்றும் இதன்போது, இந்நாட்டின் அமைவிடம் தொடர்பில் அதிக அவதானத்துடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார். அதேவேளை, இலங்கை தொடர்பில் சர்வதேசரீதியில் காணப்படும் பல்வேறு தவறான அபிப்பிராயங்களைச் சீர்செய்வதற்கும், இம்முறை ஐ.நா கூட்டத்தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திக்கொள்வார் என்று தான் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)


# மரண அறிவித்தல்

**அமரர். திருமதி. தனலட்சுமி அமிர்தலிங்கம்**



பிறப்பு: 29.03.1957
இறப்பு: 15.09.2021

முல்லைத்தீவு உதாப்பிலவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தனலட்சுமி அமிர்தலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (15.09.2021) புதன் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியும் அமிர்தவர்சினியின் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இத்தகவலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யாழ்வீதி, மானிப்பாய். (7918) தொ.பே. 077 422 2167 தகவல் குடும்பத்தினர்


# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## நவக்கிரக தோஷம் நீக்கும் மகாளய அமாவாசை



**15 நாள் விடுப்பு**

பித்ருக்களின் கோரிக்கையை நிறைவேற்ற முன்வந்த எம தர்ம ராஜன், அவர்களுக்கு 15 நாட்கள் விடுப்பு கொடுத்து பிள்ளைகளிடம் வேண்டியதை பெற்றுக்கொள்ளும் படி கூறி பூமிக்கு அனுப்பி வைக்கிறார். அந்தக்காலம் மகாளய பட்சம்.

இந்த நாட்களில் நமது மூதாதையர்கள் அவரவர் உறவினர்கள் வீட்டுக்கு வந்து வாசலில் நிற்பார்களாம்.

அந்தக் காலகட்டத்தில் நாம் அனைவரும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு முதலில் பித்ருக்களை திருப்தி செய்ய வேண்டும்.

மகாளயபட்சம் வரும் நாட்களில் அமாவாசையன்று ஏதேனும் ஒரு கோவிலில் உள்ள புனித தீர்த்தம், நதிக்கரை குளக்கரையில் அமர்ந்து தர்ப்பணம் செய்ய வேண்டும்.

அன்று செய்கின்ற தர்ப்பணத்தில் விடுகின்ற தண்ணீரை, ஸ்வேதாதேவி என்பவள் இறந்து போன நமது மூதாதையர்களின் கையில் சேர்த்து விடுகிறாள்.

(தொடரும்)

# ஐரோப்பிய ஒன்றிய குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவொன்று எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளதாக வெளிநாட்டுத் துறை அமைச்சின் செயலாளர், பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். ஜிஎஸ்.பிசலுகை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக குறித்த குழு இலங்கையை வந்தடையவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# 150 மாதிரிகள் சேகரிப்பு 148 மாதிரிகளில் டெல்டா

(கொழும்பு)

நாடு முழுவதும் ஆகஸ்ட் இறுதி வாரம் முதல் செப்டம்பர் முதல் வாரம் வரை சேகரிக்கப்பட்ட 150 மாதிரிகளில் 148 டெல்டா வைரஸ் திரிபைக் **(B.1.617.2)** கொண்டுள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. இரண்டு மாதிரிகள் மட்டுமே அல்பா (பி. 1.1.7) திரிபைக் கொண்டிருந்தன.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறை மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பேராசிரியர் நீலிகா மாளவிகே மற்றும் டாக்டர் சந்திம ஜீவந்தர உள்ளிட்ட பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. (நி-5)


# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **யசோதா கருணாகரன்** அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

**செல்வராசா பரிமளம்**


அவர்கள் கடந்த 2021.09.14 ஆம் திகதி அன்று மறைவுற்றதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், நல்லூர்.

# சீனாவை எதிர்கொள்ள ஆக்கஸ் கூட்டு ஒப்பந்தம்

**(வோஷிங்டன்)**

**அமெரிக்கா, பிரிட்டன் மற் றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் நேற்று முன்தினம் ஒரு புதிய முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தை அறிவித்துள்ளன.**



இந்தோ-பசுபிக் பகுதியில் சீனாவின் அதிகரித்து வரும் சக்தி மற்றும் இராணுவ இருப்பு குறித்து மேற்கண்ட மூன்று நாடுகளும் கவலை கொண்டுள்ளன.

இந் நிலையில் சீனாவை எதிர்கொள்ளும் புதிய முயற்சியாக இந்த ஒப்பந்தம் வெளி வந்துள்ளது.

ஆக்கஸ் (Aukus) என்று அழைக்கப்படும் இந்த ஒப்பந்தம் செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பங்கள் மற்றும் சைபர் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

மேலும் "இந்த ஒப்பந்தம் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை ஊக்குவிக்கும் மற்றும் எங்கள் பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் நலன்களுக்கு ஆதரவாக பயன்படுத்தப் படும்" என்றும் கூறினர்.

2016 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய கடற்படைக்கு 12 நீர் மூழ்கிக் கப்பல்களை உருவாக்க பிரான்ஸ் 50 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# பாகிஸ்தானில் தஞ்சமடைந்த ஆப்கான் வீராங்கனைகள்



(காபுல்)

பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க தலிபான்கள் தடை விதித்துள்ளனர். இதன் காரணமாக ஆப்கானிஸ்தானை சேர்ந்த இளம் விளையாட்டு வீராங்கனைகள் பலர் தாலிபான்களால் தங்களுக்கு ஆபத்து நேர்ந்துவிடுமோ என்ற அச்சத்தில் இருந்து வந்தனர்.

இதையடுத்து, பிரித்தானியாவை சேர்ந்த அமைதிக்கான கால்பந்து எனும் தொண்டு நிறுவனம் ஆப்கானிஸ்தானை சேர்ந்த 32 கால்பந்து வீராங்கனைகள், அவர்களின் குடும்பத்தார் அனைவரையும் பாகிஸ்தான் அரசின் உதவியுடன் அந் நாட்டுக்குப் பாதுகாப்பாக அனுப்பி வைத்தது.

ஆப்கானிஸ்தான் வீராங்கனைகளுக்கு மனிதநேய அடிப்படையில் பாகிஸ்தான் அரசும் உடனடியாக விசா வழங்கி அவர்களுக்கு அடைக்கலம் அளித்துள்ளது. (7-4)

# தடுப்பூசியைத் தவிர்க்கும் வீரர்கள் வீட்டிற்கு செல்லலாம்

## அமெரிக்க இராணுவம் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி செலுத்திக் கொள்ள மறுக்கும் இராணுவ வீரர்கள் பணிநீக்கம் செய்யப்படுவர் என அமெரிக்க இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க இராணுவ பாதுகாப்பு செயலர் லாயிட் ஆஸ்டின் பணியில் உள்ள அனைத்து இராணுவ வீரர்களும் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.கடந்த ஆகஸ்ட் மாதம் பயோஎன்டெக் தடுப்பூசிக்கு அனுமதி அளிக்கப்பட்டதிலிருந்து இராணுவ வீரர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவ, மத அல்லது நிர்வாக அடிப்படையில் இராணுவ வீரர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்துவதிலிருந்து விலக்கு கோரலாம் எனும் நடைமுறை பின்பற்றப்பட்டாலும் குறிப்பிட்ட பதவிகளில் உள்ள அதிகாரிகள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள மறுத்தால் இடைநீக்கம் அல்லது பணிநீக்கத்தை எதிர்கொள்ள நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (7-4)

# ஆபிரிக்காவிற்கு 200 மில்.தடுப்பூசிகளை வழங்கும் ஐரோப்பிய ஒன்றியம்

(கேப்டவுன்)

உலகளாவிய அளவில் கொவிட்-19 தொற்று நோயைக் கட்டுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம், 200 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பூசி மருந்துகளை ஆபிரிக்காவுக்கு வழங்கவுள்ளது.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் தனது ஐரோப்பிய நாடாளுமன்ற உரையில்,

உலகளாவிய ரீதியில் தடுப்பூசியை விரைவுபடுத்துவதே எங்கள் முதல் மற்றும் மிக முக்கியமான முன்னுரிமை. உலகளவில் செலுத்தப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசிகளில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே ஏழை நாடுகளில் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த முரண்பாட்டைகளையும் வகையில் உலகளாவிய தடுப்பூசி திட்டத்துக்கு முன்னுரிமை அளிப்போம்.

மேலும் ஆபிரிக்காவில் தடுப்பூசி உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இந்த கூட்டமைப்பினூடாக 1 பில்லியன் யூரோக்களை (1.2 பில்லியன் டொலர்கள்) முதலீடு செய்கின்றோம்' எனக் கூறினார்.

1.3 பில்லியன் மக்கள் கொண்ட கண்டத்தில் வெறும் 3.5 சதவீத மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது. (7-4)

# தலிபான் தலைவர்கள் இடையே மோதல் குழப்பத்தில் ஆப்கான் ஜனாதிபதி மாளிகை

(காபுல்)

**ஆப்கானிஸ்தான் அமைச்சரவையில் பொறுப்பு வகிக்கும் தலிபான் தலைவர்களுக்கு இடையே மோதல் வெடித்துள்ளதை அடுத்து, ஜனாதிபதி மாளிகையில் குழப்பமான சூழல் நிலவுவதாக தகவல் வெளியாகி உள்ளது.**

**தலிபான்கள் தலைமையில் இடைக்கால அரசு அறிவிக்கப் பட்டதில், தலிபான்கள் அரசியல் பிரிவு தலைவரும், அமெரிக்க படைகளுடனான பேச்சில் முக்கிய பங்கு வகித்த முல்லா அப்துல் கனி பராதருக்கு துணைப்பிரதமர் பதவி வழங்கப்பட்டது.**

**பாகிஸ்தானுக்கு மிகவும் நெருக்கமான ஹக்கானி அமைப்பின் மூத்த தலைவர்களில் உர் ரஹ்மானுக்கு உள்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.**

**ஹக்கானி குழுவினருக்கும், தலிபான்களுக்கும் இடையே காபூலில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சமீபத்தில் பேச்சு வார்த்தை இடம் பெற்ற வேளையில் தாங்கள் அதிரடியாக போர் புரிந்ததால் தான் ஆப்கானில் ஆட்சிக்கு வந்தது என, ஹக்கானி குழுவினர் தெரிவித்தாக கூறப்படுகிறது.**

**இதை முல்லா பராதர் கடுமையாக மறுத்ததாக தெரிகிறது.**

**இதையடுத்து, ஹக்கானி குழுவினருக்கும், முல்லா பராதர் ஆதரவாளர்களுக்கு பயங்கர சண்டை மூண்டதாகவும், இந்த சண்டையில் முல்லா பராதர் கொலை செய்யப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.** (7-4)

# பிரான்ஸ் படை நடத்திய தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ் தலைவர்களில் ஒருவர் பலி

(பாரிஸ்)

அமெரிக்க சிறப்பு படை வீரர்கள் மீது கொடிய தாக்குதலை நடத்திய ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர்களுள் ஒருவரான அட்னான் அபு வாலித் அல்-சஹ்ராவி மேற்கு ஆபிரிக்காவில் பிரான்ஸ் படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

இந்த தகவலை பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் நேற்று டுவிட்டர் பதிவில் உறுதிபடுத்தியுள்ளார்.

சகோலில் இடம்பெற்ற பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிரான எங்கள் மோதல் மற்றொரு பாரிய வெற்றியாகும் என்று மக்ரோன் அந்த பதிவில் கூறியுள்ளார்.

2020 ஒகஸ்ட்டில், சஹ்ராவி தனிப்பட்ட முறையில் ஆறு பிரெஞ்சு தொண்டு நிறுவன ஊழியர்களையும் அவர்களின் நைஜீரிய சாரதியையும் கொல்ல உத்தரவிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# சீனாவில் நிலநடுக்கம்


(பீஜிங்)

சீனாவின் லூசோ பகுதியில் நேற்று அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. 6.0 ரிக்டர் அளவுகோலில் பதிவான இந்நிலநடுக்கத்தால் அப்பகுதியைச் சேர்ந்த 2 பேர் பலியாகியிருக்கிறார்கள். 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

தற்போது மாகாண அரசு நிலநடுக்க எச்சரிக்கை விடுத்ததோடு மீட்புப் பணிகளிலும் தீவிரம் காட்டி வருகிறது. (7-4)

# சிறைச்சாலை விவகாரம்

# அரசு சார்பானவர்கள் என்றால் எதுவும் செய்யலாம் என்ற மனோநிலை மேலோங்குகிறது



## நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

லொஹான் ரத்வத்தை உடனே கைதுசெய்யப்பட வேண்டும். அவரின் பாராளு மன்ற உறுப்பினர் பதவி உரிய விசாரணையின் பின் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அது பறிக்கப்பட வேண்டும். உடனே சம்பந்தப்பட்ட சி.சி.ரி.வி. கமராக்கள் கையேற்கப்பட்டு பாதுகாப்பில் வைத்திருக்கப்பட வேண்டும். லொஹான் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குப் பதியப்பட்டாலும் விசாரணையின் போது தமிழ் அரசியல் கைதிகள் சாட்சிகளாக உண்மை கூறினாலும் அவர்களின் சாட்சியம் பக்கச்சார்புடையதென்று கூறி அவரை விடுதலை செய்ய பல நீதிபதிகள் காத்திருக்கக்கூடும் என நீதியரசரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது,

மூன்று விடயங்களை இவருடைய நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டியுள்ளன.

ஒன்று குற்றங்கள் புரிபவர்களுக்கு தண்டனை கிடைக்கப் போவதில்லை என்ற மனோபாவம் வெளியாகியுள்ளது. மிகக் கேவலமான ஒரு குற்றத்தைப் புரிந்து விட்டு தமது பதவியை இராஜினாமாச்செய்து விட்டு எதுவும் நடவாதது போல் சுதந்திரமாக இவர் திரிகின்றார்.


இக் குற்றத்தைப் புரிந்தவர் ஒரு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் என்றால் அவர் மீது சட்டம் பாய்ந்திருக்கும். ஆனால் அரச சார்பானவர்கள் எதையும் செய்யலாம், தண்டனை கிடைக்காது என்ற மனோபாவம் தற்போது மேனோங்கிவருகிறது.

இரண்டு - இந்த அரசாங்கத்தின் கீழ் அரச சார்பான அரசியல்வாதிகளுக்கு விதிகள், ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் என்று எதுவுமே கிடையாது என்பது நிதர்சனம். அவர்கள் நினைத்ததைச் செய்ய முடியும். அரச அலுவலர்கள் அவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும். கட்டுப்பாடின்றி சிறைச்சாலைக்குள் நுழையலாம். ஹெலிகொப்டரில் இரவில் பயணஞ் செய்யலாம். நன்றாகக் குடித்துவிட்டுப் போய் சிறைக் கைதிகளை அவர்களின் சிறைக் கூண்டுகளில் இருந்து வெளியே வரச்செய்து அவர்களுக்கு எந்தத்தீங்கையும் விளைவிக்கலாம் என்றாகிவிட்டது.

மூன்று முஸ்லிம்களுக்கும், அண்மையில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலையகத் தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்களும் மலையகத் தமிழ் மக்களும் சிங்களவர்களுடன் சேர்ந்தே இதுவரை காலமும் பயணித்து வந்தனர். இப்போது நிலைமை மாற்றம் அடைந்துள்ளது. எனவே பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் இடையே துருவமயமாக்கல் நடைபெறத் தொடங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (7-4-6)

# யானையின் சடலம் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை மாளிகை பகுதியில் யானையின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் யானையின் சடலம் ஒன்றினை அவதானித்த பொதுமக்கள் அது தொடர்பாக பொலிஸாருக்கும், வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையின் சடலத்தினை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(7-4-6-299)

# சிகரெட், மதுபானத்திற்கான விலையை அதிகரித்து சம்பள முரண்பாட்டை தீருங்கள்

## சாவ. பிரதேச சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சிகரெட் மற்றும் மதுபானத்திற்கான வரியை அதிகரித்து அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை. ஜெகதாஸ் தெரிவித்தார்.

நேற்று சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இது தொடர்பாக பிரேரணை ஒன்றினை சபையில் சமர்ப்பித்தார்.

குறித்த பிரேரணையில் மக்களின் அன்றாடப் பாவனைக்குத் தேவையான பொருட்களின் வரி மற்றும் விலை ஆகியன அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் மதுபானம் மற்றும் சிகரெட் ஆகியவற்றின் விலை இதுவரை அதிகரிக்கப்படவில்லை. குறிப்பாக சிகரெட் விலை இரண்டு வருடங்களாக அதிகரிக்கப்படவில்லை.

சிகரெட் ஒன்றிற்கான விலையை 20 ரூபாயால் அதிகரிப்பதன் மூலம் 52 பில்லியன் ரூபாய் இலாபம் ஏற்படும். அதனூடாக தற்போது போராட்டத்தில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதுடன், சிகரெட் பாவனையாளர்கள் மற்றும் அதன் பாவனையால் ஏற்படுகின்ற நோய்கள் ஆகியவற்றையும் குறைக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

குறித்த பிரேரணை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-7-30)



முல்லைத்தீவில் கொவிட் -19 தொற்று நோய் பாதிப்புக்கு இலக்கானவர்களின் உபயோகத்திற்கான வைத்திய உபகரணங்கள் மற்றும் மேலதிக பொருட்கள் கொழும்பிலுள்ள பௌத்த இளைஞர்கள் அமைத்தின் உறுப்பினர்களால் முல்லைத்தீவு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே. வாசுதேவாவிடம் கையளிக்கப்பட்டன. (படம்: யதுபாஸ்கரன்)



கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணமடைந்தவர்களின் உடலங்களை மின்தகன நிலையங் களுக்கு கொண்டு செல்வதற்குரிய நிதியுதவி ரொறன்ரோ மனிதாபிமானத்தின் குரல் அமைப்பின் ஊடாக கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் வழங்கிவைக்கப்பட்டது.

(படம்: சப்தசாங்கரி)

# உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கு நீதி கிட்ட வேண்டும்

(நெளுக்குளம்)

பதவி விலகிய இராஜாங்க அமைச்சரின் செயற்பாடு அதிகார துஷ்பிரயோகம் மட்டுமல்ல அதனால் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கு நீதியும் கிட்ட வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளுடைய தற்போதைய நிலவரம் குறித்து நேற்று அவரால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிறைச்சாலை புனர்வாழ்வு மற்றும் இராஜாங்க அமைச்சரின் பதவி விலகல் என்பன நீதியை எதிர்பார்ப்பவர்களின் கண்களில் மண்ணை தூவுவதாக அமைந்து விடக்கூடாது.

லொஹான் ரத்வத்தை மீது மதுபோதையில் இருந்தமை, அரசியல் கைதி சுலக்சனை மண்டியிடச் செய்தமை, கைத்துப்பாக்கியை நெற்றியில் வைத்தமை, மண்டியிடச் செய்து கொலை அச்சுறுத்தல் விடுத்தமை, குடிபோதையில் இருந்தவர்களையும் சிறைச்சாலைக்குள் அழைத்துச் சென்றமை, அவசர தேவை இன்றி சிறைச்சாலைக்குள் அகால நேரத்தில் சென்றமை போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

குற்றச்சாட்டுக்கு உள்ளாகின்ற அத்தனை பேர் மீதும் உரிய விசாரணை முன்னெடுக்கப்படல் வேண்டும். அதிகார துஷ்பிரயோகம் செய்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவதோடு, லொஹான் ரத்வத்தையின் ஏனைய இராஜாங்க அமைச்சுப் பதவியும் பறிக்கப்படல் வேண்டும். அதுவே நீதியை எதிர்பார்ப்போருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

இதனையும் விட இச்சம்பவத்தால் அனைத்து அரசியல் கைதிகளும் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

அவர்களுக்கு நீதி கிட்டுவதன் முதல் அடையாளமாக அநுராதபுர சிறையில் இருந்து பாதுகாப்பான யாழ்ப்பாண சிறைக்கு அவர்களை மாற்ற வேண்டுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு அவசர வேண்டுகோள் விடுக்கின்றது.

அத்தோடு உளவியல் ரீதியாக நேரடியாக பாதிக்கப்பட்ட அரசியல் கைதியான சுலக்சனை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு இதனால் பாதிக்கப்பட்டவருக்கு அவர் எதிர்பார்க்கும் நட்டஈட்டை வழங்க வேண்டும். ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் பயங்கரவாத தடைப்புச் சட்டம் நீக்கப்படும் காலமும் அரசியல் விடுதலை செய்வதற்கான கால உத்தரவாதமும் நிர்ணயிக்க வேண்டும்.

மேலும் அரசியல் கைதிகளுக்கும், ஏனைய கைதிகளுக்கும், பொதுவாக நாட்டில் அனைத்து அரசியல் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கும், மனித உரிமை ஆர்வலர்களுக்கும் கருத்து சுதந்திரத்துக்கான பாதுகாப்போடு, வாழ்வு சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதிசெய்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4-6-299)

623 பொருட்களுக்கான தடை

# நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு தடை உத்தரவு பொருந்தாது

(கொழும்பு)

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் நாடு திரும்பும் போது பொருட்களை கொண்டு வருவதற்கு எந்த தடையும் விதிக்கப்படவில்லை என நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல தெரிவித்தார்.

அண்மையில் மத்திய வங்கியினால் 623 பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு இருந்தன.

இதையடுத்து வெளிநாட்டிலிருந்து இலங்கையர்கள் நாடு திரும்பும் போது குறிப்பிட்ட பொருட்களை கொண்டு வர தடை விதிக்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

623 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மக்கள் தவறாக புரிந்து கொண்டுள்ளார்கள்.

நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு இந்த தடை உத்தரவு பொருந்தாது. இது இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மட்டுமே என்று குறிப்பிட்டார். (நி-5)

# வெளிப்படுத்தப்படாத சொத்துகளை முதலீட்டிற்கு பயன்படுத்த அனுமதி

(கொழும்பு)

வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை முதலீட்டிற்கு பயன்படுத்த அனுமதி வழங்கும் நிதி சட்டமூலம் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் உறுதிப்படுத்தலுடன் இந்த சட்டமூலம் நேற்று வியாழக்கிழமை முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை முதலீட்டிற்கு பயன்படுத்த அனுமதி வழங்கும் நிதி சட்டமூலம் திருத்தங்களுடன் கடந்த 7 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

அதற்கு ஆதரவாக 134 வாக்குகளும் எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நாடு திறக்கப்பட்டதும் அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும்

## தேசிய விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர்

(கொழும்பு)

**நாட்டில் நாள் ஒன்றுக்கு 65 லட்சம் கிலோகிராம் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதனை ஒரு போதும் தவிர்க்க முடியாது.**



அரிசி மற்றும் நெல்லுக்கு இடையே அரசாங்கம் கடுமையான சிக்கலை உருவாக்கியுள்ளதனால் நாட்டில் பாரிய அரிசி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக தேசிய விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் செயற்பாட்டின் விளைவாகவே இந்த முடிவை நாங்கள் பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு திறக்கப்பட்டவுடன் இந்த நிலைமை ஏற்படும் நாட்டின் அனைத்து பொருட்களுக்கும் பாரியளவு விலை அதிகரித்துள்ளது. எனினும் நெல்லுக்கு தேவையான கட்டணத்தை அரசாங்கம் செலுத்துவதில்லை. இதனால் பாரிய அநீதிக்குள்ளாகியுள்ள விவசாயிகளால் நெல் விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அரிசி உற்பத்தி தடைப்பட்டுள்ளதால், நூற்றுக்கு 50 வீதம் அரிசி உற்பத்தி தடைப்பட்டுள்ளது.

முடக்க நிலை தளர்த்தப்பட்டவுடன் உணவகங்கள் திறக்கப்படும். எனவே அசிரிகளின் தேவையும் அதிகரிக்கும். நாட்டில் நாள் ஒன்றுக்கு 65 லட்சம் கிலோகிராம் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதனை ஒரு போதும் தவிர்க்க முடியாதென அவர் தெரிவித்தார். (நி-5)




யுஸ்ரினா




பவானி




தரண்




பிரவீன்




சர்வீகா




சுவஸ்தீகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### நாடு பொருளாதாரத்தில் முன்னேற

# உழைப்பின் ஒரு பகுதியை நாட்டிற்கு அனுப்புங்கள்

## இத்தாலியில் பீரிஸ் கோரிக்கை



(கொழும்பு)

வெளிநாடுகளிலிருக்கும் இலங்கையர் தமது உழைப்பின் ஒருபகுதியை நாட்டுக்கு அனுப்புமாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு டொலருக்கும் பெறுமதியை காட்டிலும் மேலதிகமாக இரண்டு ரூபாவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்தாலியில் இடம்பெற்றநிகழ்வு ஒன்றிலேயே இதை குறிப்பிட்டார்.

"வெளிநாடுகளில் வாழ்பவர்களுக்கு தமது நாடு தான் அடையாளம். என்றாலும் வெளிநாடுகளுக்குச்சென்று நாட்டின் அரச தலைவரை விமர்சித்தல், கறுப்புக்கொடிகளை காண்பித்தல் உட்பட பல்வேறு விடயங்களை செய்வது அரசுக்கு எதிரானதாக அமையாது.

வெளிநாடுகளிலிருந்து கொண்டு அரசியல் கட்சிகளுக்கோ அல்லது அரச தலைவர்களுக்கு எதிராகவோ மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயற்பாடுகளால் பாதிப்பு ஏற்படுவது நாட்டுக்கேயாகும். நாட்டில் பல்வேறு எதிர்பார்ப்புகளை கொண்டவர்கள் உள்ளனர். நாட்டை நாசமாக்கும் நோக்குடையவர்களும் இருக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளைக் கொண்டு அவர்கள் நாட்டை பலமிழக்க செய்ய முற்படுகின்றனர்.

கொவிட் 19 தொற்றுக்கு மத்தியிலும் நாடு பல்வேறு துறைகளில் வளர்ச்சியை காண்பித்துள்ளது. அவ்வாறான சூழலில் நாட்டின் தலைவருக்கு எதிராக நாட்டில் அல்ல வெளிநாட்டில் இழுக்கை ஏற்படுத்துகின்றமை நல்ல விடயமல்ல.

வெளிநாடுகளில் இருப்பவர்கள் தமது உழைப்பின் ஒரு பகுதியை தாய் நாட்டுக்கு அனுப்பினால் எமது பொருளாதாரத்துக்கு அது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

நிதிஅமைச்சும் திறைசேரியும் வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு அனுபப்படும் டொலர் ஒன்றுக்கு பெறுமதியை காட்டிலும் மேலதிகமாக 2 ரூபாவை செலுத்த முடிவு செய்துள்ளது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# சிறைச்சாலைகள் விவகாரம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகள் துப்பாக்கிமுனையில் மண்டியிட வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மனிதஉரிமைஆணைக்குழுவின் 3 பிராந்திய ஒருங்கிணைப்பு அதிகாரிகள் ஊடாக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த உள்ளிட்ட குழுவினர் வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளுக்கு சென்று அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த சம்பவத்திற்கு எதிர்ப்பலைகள் வெளிப்பட்டதை அடுத்து லொஹான் ரத்வத்த தமது இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து விலகினார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் நேரில் சென்று ஆராய்ந்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் விளக்கமளிக்க அழைப்பு விடுக்கப்படும் என இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-5)

# ரெபிட் அன்டிஜன் பரிசோதனை நிலையம் ஆறு நாட்கள் திறந்திருக்கும்

(கொழும்பு)

பொரளை கெம்பல் பார்க் மைதானத்தில் ரெபிட் அன்டிஜன் பரிசோதனை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையினால் இதுகுறித்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை குறித்த நிலையம் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இங்கு மேற்கொள்ளப்படும் அன்டிஜன் பரிசோதனைகளுக்காக எவ்விதமான கட்டணங்களும் அறிவிடப்படமாட்டாது என கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபைக்குள் தொழிலுக்காக வருகைத்தருபவர்கள் மற்றும் தற்காலிகமாக தங்கியிருப்போரும் குறித்த சேவைகளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கால்பந்தாட்டக் கவலைகள்

ஒரு பெரிய மனிதன், ஒரு கால்பந்தாட்ட விளையாட்டுப் போட்டிக்குப் போனார். அவர் தான் அன்றைக்கு முக்கிய விருந்தினர். ஜெயிக்கிறவர்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டியவர். மிகவும் ஊக்கமாக விளையாட்டுப் போட்டியை கவனித்துக் கொண்டிருந்தார்.

இந்தப் போட்டியைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று அவரிடம் கேட்டார்கள் போட்டி ஏற்பாடு செய்திருந்தவர்கள். இதற்கு அவர் கொஞ்ச நேரம் தீர்க்கமாக யோசித்துவிட்டுச் சொன்னார்... ஒரு பந்திற்காக என்னத்திற்கு இவ்வளவு பேர் அடித்துப் பிடித்துக் கொண்டு நிற்கின்றார்கள்...? ஆளுக்கு ஒரு பந்து வாங்கிக் கொடுத்துவிடலாம் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம் என்றார். மிகவும் விபரமான ஆளாக பார்த்துத் தான் பரிசு கொடுக்க அழைத்துக் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

ஆனால் ஒரு விடயம். அவர் சொன்னதில் ஒரு விடயம் உண்மை. ஒரு பந்திற்காக எல்லோரும் அடித்துப் பிடித்துக் கொண்டு நிற்கின்றார்கள் என்று சொன்னாரே அதுதான். இந்த விளையாட்டு விளையாட வேண்டும் என்று நினைத்தால் அடிபடுவதற்கும், காயப்படுவதற்கும் கவலைப்படக் கூடாது. அப்படிப்பட்ட விளையாட்டு இது.

வேடிக்கை பார்க்கின்றவர்களும் மிகவும் உணர்ச்சிவசப்படக் கூடிய விளையாட்டு இது. புட்போல் விளையாடப் போகின்றவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும் என்றால், முழங்கால் பத்திரம், குதிக்கால் பத்திரம் என்று தான் சொல்லி அனுப்ப வேண்டும்.

முழங்கால் எங்கள் உடம்பிலே முக்கியமான ஒரு பகுதி. அதை நாம் இயற்கையாக உபயோகப்படுத்த வேண்டும் என்றால் நீட்டலாம், மடக்கலாம் அவ்வளவுதான். ஒரு பக்கம் தான் மடக்க முடியும். ஆனால் புட்போல் விளையாடுபவர்கள் இந்த முழங்காலை வேறு விதமாகவும் உபயோகப்படுத்துகின்ற பொழுது நிலைமை விபரீதமாகிவிடுகின்றது. ஓடுவது, திடீர் என்று திரும்புவது, முறுக்கிக் கொண்டு விழுவது,வளைவது. பாவம் அந்த முழங்கால் எவ்வளவு தான் தாங்கும்.

பல சமயங்களிலே ஒரு கால்பந்தை உதைக்கின்ற பொழுது உடம்பு எடை முழுவதும் இன்னொருகால் தானே தாங்க வேண்டியிருக்கின்றது. கொஞ்சம் தடுமாறினாலும் சிக்கல் தானே? விளையாடுகின்ற பொழுது முழங்காலிலே அடிபட்டதென்றால் முதலில் செய்ய வேண்டியது என்ன? அடி பலமாக, லேசா என்று முதலில் கண்டு பிடிக்க வேண்டும். அதை எப்படி கண்டுபிடிப்பது? Severe Injury என்றால் அதற்கு சில அடையாளங்கள் உண்டு. வீக்கம், வலி, மூட்டு பிசகிப் போவது-முழங்காலை நீட்ட முடியாது. இப்படி இருந்தால் அது Major அப்படி இல்லை என்றால் அது Minor.

சாதாரண அடி என்றால் அதற்கு ஐஸ் ஒத்தடம் கொடுத்தால் போதும். பின்பு ஒரு Knee cap போட்டு விட்டு மறுபடியும் விளையாட விட்டுவிடலாம். அடி கடுமையாக இருந்தால் அவரைப் பேசாமல் தூக்கிக் கொண்டு ஒரு Sports Doctor இடம் போயிட வேண்டியது தான். தசை சிதைத்து போயிருக்கிறதற்கு வலி ஒரு அடையாளம். வலித்தால் ஓய்வு எடுத்துக் கொள் என்று உடம்பு சொல்வதா அர்த்தம்.

அந்த சமயத்திலே அதைப் புரிந்து கொள்ளாமல் சும்மா வலியை மறப்பது என்று ஏதாவது மருந்து போட்டுக் கொண்டு, மறுபடியும் விளையாட்டிலே இறங்கினால் அது இடைஞ்சலில் கொண்டுவந்து விட்டுவிடும். காயம் பெரிதாக ஆகிவிடும்.

Arthroscopic Surgery இப்பொழுது மிகவும் முன்னேறியிருக்கின்றது. டாக்டர் என்ன செய்கின்றார் என்றால் ஒரு சின்ன டெலஸ்கோப்பை முழங்கால் மூட்டுக்குள்ளே செலுத்துகின்றார். அந்த இடத்திலே வலி மரப்பு மருந்து போட்டுக் கொண்டு தான் ஒரு T.V, Monitor இலே பார்க்கின்றார். உள்ளே என்ன கோளாறு என்பது தெரிகின்றது.

ஒரு ஆப்பரேஷன் செய்து பார்க்க வேண்டியதை சுலபமாக T.V. யிலே படம் பார்ப்பதுமாதிரி பார்த்துவிடுகின்றார். சில உபகரணங்களை இன்னொரு குழாய் மூலமாக உள்ளே செலுத்தி சிதைவுகளை சரி செய்து விடுகின்றார். மிகவும் சாதாரணமாக இந்த சிகிச்சை முடிந்துவிட்டது. இரத்தம் இல்லை. தையல் இல்லை. பிளாஸ்டர் இல்லை. வைத்தியசாலையில் படுத்துக் கொண்டு காலுக்கு ஊஞ்சல் கட்டிவிட்டு அதையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

சீக்கிரமாக குணமாகிவிடும். கொஞ்ச நாளிலே மறுபடியும் பந்து உதைக்கப் போய்விடலாம். ஒருத்தர் உதைபந்தாட்டம் விளையாடினார். காலிலே சுளுக்கு விழுந்து விட்டது. கொஞ்ச நாள் கழித்து அவரை இன்னொருத்தர் பார்த்தார்.

என்ன சேர்? சுளுக்குக்கு என்ன வைத்தியம் செய்தீர்கள்? என்று கேட்டார்.

ஒத்தடம் கொடுத்தால் சரியாக போய்விடும் என்று சில பேர் சொன்னார்கள். செஞ்சு பாத்தேன். சரியா வரவில்லை. பச்சிலை தடவினால் சரியா போய்விடும் என்று சில பேர் சொன்னார்கள். செஞ்சு பார்த்தேன் அதுவும் சரியா வரவில்லை.. பின்பு மருந்து தடவினேன். மாத்திரை சாப்பிட்டேன் எதுவும் சரியாக வரவில்லை. கடைசியில் கோபத்தில் காலை உதறினேன் சரியாகப் போய் விட்டது என்றார். பலே ஆள் சேர் நீங்கள்.. அது சரி.. பின்பு ஏன் இன்னமும் காலை இழுத்து இழுத்துவிட்டு நடக்கின்றீர்கள்? என்று கேட்டார் அவர். இது வரைக்கும் நான் சொல்லிக் கொண்டு வந்தது இடது காலுக்கு சேர். வலது காலுக்கு அப்படியே தான் இருக்கு. அது தான் இழுத்துக் கொண்டு நடக்கின்றேன் என்று சொல்லிவிட்டு அது மாதிரியே நடந்து போய்க் கொண்டிருந்தார் அந்த ஆள்.



# சிறுவர் அரங்கம்

## மொட்டைத்தலை



ஒரு ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு எதை யாரிடம் கேட்க வேண்டும் என்ற விவஸ்தை கிடையாது.

இடம் பொருள் ஏவல் என்று எதுவும் தெரியாமல் கண்ணில் பட்டோரிடம் கண்டதையும் கேட்டு விடுவான்.

அதனால் அவனை, "வெகுளி அரசன்" என்றே பலரும் கருதினர். அந்த மாதிரிதான் அவரும் நடந்து கொள்வார்.

ஒரு சமயம், அந்த அரசனுக்கு முழங்காலில் வலி ஏற்பட்டது. உடனே அமைச்சரை அழைத்தான்.

"அமைச்சரே, எனது முழங்காலில் வலி ஏற்பட்டுள்ளது.

அப்படியும் இப்படியும் காலை அசைக்க முடியவில்லை. என்ன செய்யலாம்?" என்று ஆலோசனை கேட்டான்.

அமைச்சர் ஒரு கணம் தீவிரமாக யோசித்தான். "எந்த ஒரு விடயமானாலும் அது சிறிதாக இருந்தாலும் சரி, பெரிதாக இருந்தாலும் சரி, நம் அரண்மனை குருவிடம் கேட்டுத்தானே செய்கிறோம்.

அதனால் அந்த முழங்கால் வலி பற்றியும் அவரிடம் கேட்கலாம். அவர் என்ன சொல்கிறாரோ? அதன்படி செய்வதே நல்லது" என்றார் அமைச்சர்.

அமைச்சர் சொல்வது சரியென அரசனுக்குப் பட்டது. அதனால் அவர் அரண்மனை குருவை அழைத்து வரும்படி தனது சேவகர்களுக்கு உத்தரவிட்டான். அரச குருவை அழைத்து வரச் சேவகர்கள் உடனே புறப்பட்டனர். சிறிது நேரத்தில் அரச குரு அங்கு வந்து சேர்ந்தார்.

"என்னை அழைத்த காரணம் என்னவோ, நான் தெரிந்து கொள்ளலாமா?" எனக் குரு, அரசனைப் பார்த்து கேட்டார். (தொடரும்)

# மகாபாரதம்

(186)



மயில் தன் தோற்றத்தினாலேயே காக்கை முதலான பறவைகளின் குறை தோன்றுமாறு இருப்பது போல, மன்னன் தன் நேர்மையினாலேயே பகை மன்னர்களின் குறைகள் வெளிப்படுமாறு இருத்தல் வேண்டும்.

மயில் உயர்ந்த வளமான மலையை நாடுவது போல, மன்னன் தன்னைவிட உயர்ந்த மன்னர்களுடன் நல்லுறவு கொள்ள வேண்டும்.

மயில் களைத்த போது நிழலை விரும்புவது போல, தளர்ந்த காலத்தில் சுற்றத்தாரிடம் விரும்பிச் செல்ல வேண்டும்.

மயில் வேனிற் காலத்தில் மரத்தில் மறைந்திருப்பது போல அரசன் இரகசியமான இடங்களைச் சார்ந்து இருக்க வேண்டும்.

மயில் மழைகாலத்தில் மகிழ்ந்து இருப்பது போல மன்னன் மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் தனிமையில் மகிழ்ந்து இருத்தல் வேண்டும்.

மயில் தான் சஞ்சரிக்கும் இடங்களில் தன்னைப் பிடிக்க அமைத்த வலைகளை விலக்கித் தப்பித்துக் கொள்வது போல, மன்னன் பகைவர் விரித்த வலைகளை ஒற்றர்கள் மூலம் அறிந்து அவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும். மயில் நச்சுத்தன்மை வாய்ந்த பாம்புகளைக் கொல்வது போல அரசன் வஞ்சக மன்னர்களைக் கொல்ல வேண்டும்.

மயில் புழு முதலியவற்றை வெறுக்காது இருப்பது போல, மன்னன் தாழ்ந்தவரைக் கண்டு அருவருப்பு அடையக் கூடாது.

மயில் உறுதியான சிறகுகளைக் கொண்டிருப்பதைப் போல, மன்னன் உறுதிமிக்க அமைச்சர்களைப் பெற்றிருக்க வேண்டும்.

மயில் தன் சிறகுகளை விருப்பப்படி விரிப்பது போல, மன்னன் தன் சுற்றத்தாரிடம் விரிந்து பரந்த மனதுடன் இருக்க வேண்டும்.

எல்லா இடங்களில் இருந்தும் நல்லறிவைப் பெற்று நாட்டை நன்கு ஆட்சி புரிய வேண்டும்" என்றார் பீஷ்மர்.

### தருமங்களின் மூல காரணம் சீலம்

தருமர்.. பீஷ்மரைப் பார்த்து "எல்லா தருமங்களுக்கும் மூல காரணமான சீலத்தைப் பற்றி கூறவும் சீலம் என்பது என்ன? அதனை எப்படி பெறுவது?" என வினவினார். பீஷ்மர் உரைக்கலானார்.

(தொடரும்)

சிறிய விடயத்தில் நியாயம் தவறுபவன், பெரிய விடயத்திலும் தொடருவான்!

~ இவேகநாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொலை முயற்சி செய்தவரை கைது செய்யாதது ஏன்?

சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று, தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் இருக்கவைத்து, அவர்களை துப்பாக்கி முனையில் கொல்லுவேன் என மிரட்டிய சம்பவம் இலங்கை முழுவதிலும் பேசுபொருளாயிற்று.

மேற்படி சம்பவம் கசிந்ததன் காரணமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ லொஹான் ரத்வத்தயுடன் தொடர்பு கொண்டு இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு கூற; உள்ளபடி அவர் தனது இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இது அரசியல் ரீதியான ஒரு நடவடிக்கை மட்டுமேயன்றி இங்கு சட்டரீதியான நடவடிக்கை எதனையும் ஆட்சித் தரப்பு செய்யவில்லை.

உண்மையில், லொஹான் ரத்வத்தயுடன் தொடர்புகொண்டு இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்யுமாறு கூறிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அடுத்த கட்டமாக பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டு தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் இருக்க வைத்தது தொடர்பிலும் அவர்களை துப்பாக்கி முனையில் மிரட்டிய சம்பவம் தொடர்பிலும் லொஹான் ரத்தவத்தயை உடனடியாகக் கைது செய்து விசாரணை நடத்துங்கள் எனப் பணித்திருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறான நடவடிக்கை எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

மாறாக லொஹான் ரத்வத்த; தமிழ் அரசியல் கைதிகளை மிரட்டியதான முறைப்பாடுகள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் தம்மால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் பொலிஸ் தரப்பு கூறியுள்ளது.

இங்குதான் பொலிஸாரின் பக்கச்சார்பு வெளிப்படுகிறது.

அதாவது குறித்த சம்பவம் அநுராதபுரம் சிறைச்சாலையில் நடந்துள்ளது.

குறித்த சம்பவத்தை பொலிஸில் முறைப்பாடு செய்வதாக இருந்தால், அதனை சம்பந்தப்பட்ட அரசியல் கைதிகளே செய்ய வேண்டும்.

அப்படியாயின், ஓர் அரசியல் கைதி பொலிஸ் நிலையம் சென்று, இராஜாங்க அமைச்சர் தன்னை துப்பாக்கி முனையில் மிரட்டினார் என்று முறைப்பாடு செய்ய முடியுமா என்ன?

ஆக, குறித்த சம்பவம் நடந்து அதன் எதிரொலியாக இராஜாங்க அமைச்சுப்பதவியை லொஹான் ரத்வத்த இராஜினாமாச் செய்திருக்கக்கூடிய இந்த நேரத்தில், பொலிஸார் தாமாக சிறைச்சாலைக்குச் சென்று சம்பந்தப்பட்ட அரசியல் கைதிகளிடம் முறைப்பாட்டைப் பெற்று, லொஹான் ரத்வத்தயைக் கைது செய்திருக்க வேண்டும்.

ஆனால் இவை எதுவும் நடைபெறவில்லை எனும்போது இதற்குக் காரணம் என்ன? என்ற கேள்வி எழும்.

இங்குதான் அரசியல் கைதிகள் தமிழர்கள். லொஹான் ரத்வத்த சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர். எனவே பொலிஸார் அவரைக் கைது செய்யமாட்டார்கள் என்பதுதான் நிறுதிட்டமான உண்மை.

## பாடசாலைகள் மீள திறப்பதற்கு முன் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும்

(கொழும்பு)

2021 உயர்தர மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட மாற்று முறைகள் குறித்து இலங்கை ஆசிரியர் சங்கம்கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேள்விஎழுப்பியுள்ளது.

தற்போதைய ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

முன்மொழியப்பட்ட மாற்று முறைகள் அச்சுறுத்தல்களா என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேள்விஎழுப்பியுள்ளார்.

'விண்ணப்பங்களை அதிபர்கள் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

அரசு மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையிலான மோதலை பேச்சுக்கள் மூலம் மட்டுமே தீர்க்க முடியும்.

பாடசாலைகள் திறப்பதற்கு முன்பு அவர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும்' என்றும் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் செய்தியாளர்களிடம் கூறினார். (ம-3)

## புதிய அரசமைப்புக்கான வரைபு நவம்பரில் ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினர், இறுதிச் சட்ட வரைபு எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

அத்துடன், மேற்படி நிபுணர்கள் குழுவின் ஆயுட்காலமும் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமையால் ஏற்பட்ட சில தாமதங்களைக் கருத்தில் கொண்டே கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

புதியதொரு அரசமைப்பு உருவாக்கப்படும் என்ற உறுதிமொழியுடனேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சிப்பீடம் ஏறினார்.

இந்நிலையில் புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவானது பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளிடமிருந்து புதிய அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்ற முன்மொழிவுகளைக் கோரியிருந்தது. இதன்படி பல தரப்பட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. மேலதிக விபரங்களுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் இதர தரப்புகளை அழைத்து விளக்கமும் பெற்றிருந்தது.

அதன் பின்னர் விரைவு நகல் தயாரிக்கும் பணி ஆரம்பமானது. தற்போது ஆரம்பகட்ட சட்டவரைபு ஆய்வு நிலையில் உள்ளது என அறியமுடிகின்றது. சட்ட வரைபு திணைக்களத்தின் கண்காணிப்பின் பின்னர் இறுதிவரைபு தயாரிக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, தான் ஆட்சிக்கு வந்து ஈராண்டுகள் நிறைவு பெறுவதற்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வவுனியாவில் மேலும் 68 பேருக்கு கோவிட்

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 68 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 68 பேருக்கு மேலும் கோவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

(ம-3,250,299)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### படிமுறை வளர்ச்சி: ஆன்மாவின் கூறு அல்ல

நீங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறீர்களா? ஆம் என்றால், நீங்கள் ஆன்மாவினுள் இல்லை என்றாகிறது. அனால் ஆன்மாவிற்கு வெளியே எதுவும் இருக்க முடியாது. (சிரிப்பு).

ஆன்மாவில் இருக்காத ஆறு வடிவச் சிதைவுகள்

1. விரிவடைதல் (பிரசரணா)- ஏற்கனவே இருக்கும் ஒன்றினுள் இன்னொன்று விரிவடைகிறது என்பதை விரிவடைதல் குறிப்பிடுகிறது. எது விரிவடைகிறதோ அது விரிவின் அடிப்படையாக இருக்க முடியாது.

2.சுருக்கம் (அகுஞ்சனா)- சுருக்கம் என்றால் ஒன்று மற்றொன்றிலிருந்து சுருங்குகிறது என்று பொருள். ஆன்மா எதிலிருந்தும் பின்வாங்காது அல்லது சுருங்காது. எனவே சுருக்கம் என்பது ஆன்மாவில் இல்லை.

3. சிதைவு (க்சயா)- ஆன்மாவிற்குப் பின்னடைவுப் போக்கு அல்லது சிதைவு இல்லை. ஆன்மா முதுமையடைவதில்லை. அல்லது மட்கிப் போவதில்லை. அதனால்தான் நீங்கள் ஆன்மாவிற்கு நெருக்கமாக இருக்கும் போது உங்களுக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர்வதில்லை. (தொடரும்)

## மருத்துவக் குறிப்பு

முற்றின இஞ்சியை எடுத்து நசுக்கிப் பிழிந்து சாறெடுத்து அத்துடன் சிறிது தேனையும் கலந்து சாப்பிட தலைச்சுற்றலும் நிற்கும். இரத்த அழுத்தம் தீரும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

சைவனாகப் பிறந்து எவன் திருநீறு அணியாமல் மயானம் போல் நெற்றியை வைத்துக் கொண்டிருக்கின்றானோ அவனுடைய நெற்றியில் தீயை வை என்று பிருகத் ஜாபாலம் என்ற உபநிஷதம் முழங்குகின்றது.

ஒருவன் இளமை தொட்டு பிறவித்துயருக்கு அஞ்சும் இயல்பு திருவருளால் எய்தியது. ஆதலால் நெஞ்சிலே பாவஞ் செய்யக்கூடாது என்ற எண்ணமும் அவன் அருளால் எய்தப்படுவது. (தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

39



கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

● தமிழ் மக்கள் ஒரு தனிச் சிறப்புமிக்க தேசியமாகும் என்பதோடு சிங்கள மக்களோடும் ஏனையவர்களுடனும் சேர்ந்து இலங்கைத் தீவில் வாழ்ந்தும் வந்துள்ளனர்.

● புவியியல் ரீதியாக பிணைக்கப்பட்டுள்ளதும் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதுமான்வடக்கு கிழக்கு மாகாணங்களே தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடமாகும்.

● தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்களாவர்.

● தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முறையில், சமஷ்டி கட்டமைப்பொன்றை அடிப்படையாகக் கொண்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் எனும் ஓர் அலகில் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் நிறுவப்பட வேண்டும்.

● அதிகாரப் பரவலாக்கமானது காணி, சட்டம் ஒழுங்கு, சுகாதாரம், கல்வி ஆகியன உள்ளிட்ட சமூக பொருளாதார அபிவிருத்தி, வளங்கள் மற்றும் நிதி அதிகாரங்கள் ஆகியவற்றின் மீதானவையாக இருக்க வேண்டும்.

### தமிழ் மக்களின் உடனடி அக்கறைக்குரிய விடயங்கள்!

நீதியானதும், நிலைத்திருக்கத்தக்கதுமான சமாதானத்திற்காக தொடர்ந்து முயல்வதற்கு மேலதிகமாக, எமது மக்களின் தற்போதைய உடனடி கவலைகளைத் தீர்த்து வைப்பதிலும் நாம் முனைப்புடன் ஈடுபடுவோம். ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட வல்லுனர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் மார்ச் 2012 இலும் மார்ச் 2013 இலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் அமுல்படுத்த நாம் முனைவோம். விசேட விடயங்கள் பின்வருமாறு-

● ஆயுதப் படைகள், இராணுவச் சாதனங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் ஆகியவற்றை வடக்கு- கிழக்கிலிருந்து அகற்றுவதன் மூலம் 1983 இல் நிலவிய யுத்தத்திற்கு முந்திய சூழ்நிலை மீண்டும் ஏற்படும் வகையில் காத்திரபூர்வமான இராணுவ பிரசன்னமற்ற நிலை இருக்கவேண்டும்.

● போர் காரணமாக வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது முன்னைய இடங்களில் துரிதமாக மீள்குடியேற்றப்பட்டு வீடுகள் வழங்கப்படவேண்டும், அவர்களது வாழ்வாதாரம் மீண்டும் ஏற்படுத்தித்தரப்படவேண்டும், அவர்களது கௌரவம் மதிக்கப்பட வேண்டும்.

● யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறியமை பற்றிய இலங்கை அரசாங்கத்துக்கும் த.ஈ.வி.புலிகளுக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட்டு, உண்மையும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் நிலைநாட்டப்படுவதோடு, இழப்பீடுகள் அடங்கலான நிவாரணங்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

● குற்றச்சாட்டுக்களின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படுவதோடு, ஏனையவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவேண்டும்.

● காணாமல் போன ஆயிரக்கணக்கானவர்கள் தொடர்பாக இறுதி முடிவொன்று எட்டப்பட வேண்டும் என்பதோடு, அவர்களின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவும் வேண்டும்.

● நாட்டை விட்டு தப்பியோடிய தமிழர்கள் தமது வீடுகளுக்கு திரும்பி வருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்பதோடு, அவர்கள் திரும்பி வருவதற்கு உகந்ததோர் சூழ்நிலை உருவாக்கப்படவும் வேண்டும்.

● இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்குதல் அடங்கலாக வடக்கு- கிழக்கின் அபிவிருத்திக்கான விரிவானதொரு நிகழ்ச்சித் திட்டம் இலங்கை அரசாங்கத்தினதும் புலம் பெயர்ந்த தமிழர்களதும் சர்வதேச சமூகத்தினதும் முனைப்பான ஆதரவுடன் மேற் கொள்ளப்படும்.

சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றம் உடன்படிக்கைகள் தொடர்பாகப் பேணப்படும் விளக்கங்களுக்கமைய, இலங்கை வாழ் தமிழர்களான நாம் தனிச் சிறப்புமிக்கதொரு மக்கள் கூட்டமாகும். ஒரு மக்கள் கூட்டம் என்ற வகையில் நாம் இந்த நாட்டில் பேரினவாத விரிவாக்கத்திற்கு ஆட்படாது, கண்ணியத்துடனும் சுய மரியாதையுடனும் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் சமத்துவமான பிரஜைகளாக ஏனைய மக்களுடன் தொடர்ந்து சமாதான சகவாழ்வு வாழவே விரும்புகிறோம்.

எனவே, ஒரு மக்கள் கூட்டம் என்ற வகையில், எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள், ஒரு தேசியம் என்ற வகையில் எமக்கு உரித்தாகின்ற எமது ஒருமித்த உரிமைகள் மற்றும் ஒன்றுபட்ட ஓர் இலங்கைக்குள் நாட்டின் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட வடக்கு கிழக்கில் சுய அரசாங்கமொன்றை உறுதி செய்வதற்கு நாங்கள் செய்யக்கூடியது என்ன என்பதை தீர்மானிப்பதற்கான எமது தெரிவை பயன்படுத்துவதற்கான எமது உரிமை ஆகியன பற்றி நாம் கரிசனை கொண்டுள்ளோம்.

இது தொடர்பான தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடுகள் திருப்தியற்றவையாக அமைந்துள்ளன. பெரும்பான்மை சமூகத்திற்கும் பேரினவாத விரிவாக்கத்திற்கும் சார்பான அரசியலமைப்பு ஒன்று தான் தற்போது உள்ளது. நீதி, சமத்துவம், சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு வகை செய்யும் ஒரு அரசியலமைப்பு முறைமை இன்றி பல்லின சமூகமொன்றில் ஜனநாயகம் செயற்பட முடியாது. இந்தக் கண்ணோட்டத்தில்தான் நாங்கள் எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலை நோக்குகின்றோம்.

இறையாண்மை என்பது, மக்களிடமே உண்டு, அரசிடம் இல்லை என்று த.தே.கூ. உறுதியாக நம்புகிறது. தமிழ் மக்களை ஆளுகின்ற உரிமை கொழும்பிலிருக்கும் அரசாங்கத்திடமின்றி, அம் மக்களிடமே உண்டு. மத்திய அரசாங்கத்திலும் அதன் முகவரான ஆளுநரிடமும் அதிகாரம் குவிந்து கிடக்கிறது என்பதால், இலங்கை அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் மீறப்பட்டுள்ளது. யதேச்சாதிகார அரசிற்கு விடுக்கும் ஒரு அடிப்படை ஜனநாயக சவாலில் தான் எமது அரசியல் சித்தாந்தம் வேரூன்றி நிற்கின்றது.

எனவே, தமிழ் மக்களின் தேவைகளிலும் வேணவாக்களிலுமே எமது நீதிக்கும் சமத்துவத்திற்குமான அரசியல் நிகழ்ச்சித் திட்டம் வேரூன்றி இருக்கிறது. மேற் கூறியவற்றையும் (தேவைகளையும் வேணவாக்களையும்) நம்மில் நாம் தங்கியிருத்தலையும் அடைவதற்கு நம்மை நாமே ஆளுகின்ற அரசாங்கம் எமக்கு வேண்டுமென்பது முக்கியமாகும். இதனை அடைவதற்காக ஓர் இரு கட்ட அரசியலமைப்பு செயன்முறையை நாம் வகுத்துள்ளோம்.

வடக்கு- கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கான தன்னாட்சி அரசாங்கம் ஒன்றிற்காக குரல் கொடுப்பதில் சிறந்த பங்கொன்றை வகிப்பதற்கு எங்களால் இயன்றதனைத்தையும் செய்கின்ற அதே வேளை, ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கான எமது காத்திரபூர்வமான அரசியல் பேச்சுவார்த்தைகளை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம்.

நியாயமாகவே எங்களுக்குரியதான அந்த அரசாங்கப் பணிகளைப் பொறுப்பேற்பதற்கு சட்டவாக்க, நீதித்துறை மற்றும் நிதி அதிகாரங்களைக் கொண்ட, ஜனநாயக வழியில் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அமைப்பு இருக்க வேண்டியதன் தேவையை நாங்கள் இதைவிட வலியுறுத்த முடியாது.

தீவின் வடக்கு-கிழக்குப் பகுதிகள் மூன்று தசாப்த கால ஆயுத மோதலினால் நொந்து போயுள்ளது. நேரடி மோதலின் விளைவுகளாக -போரிடும் தரப்பினர் மத்தியிலான இழப்புகள், படையினரின் ஒழுக்க மற்ற நடத்தை, வேண்டுமென்றே குடி மக்களை குறி வைத்துத் தாக்கியமை மற்றும் கண்ணிவெடிகளை புதைத்தமை - மட்டுமன்றி, பட்டினி, பல வந்தமாக குடியகலச் செய்தமை மற்றும் வடக்கு கிழக்கின் பொருளாதார மற்றம் நிர்வாகக் கட்டமைப்புக்களின்சீரழிவினால் ஏற்பட்ட அரசாங்க சேவைகளின் வீழ்ச்சி ஆகியவற்றினாலும் மனித இழப்புகள் ஏற்பட்டன.

### உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் !

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு (உஇஆ) நீடித்து நிலைக்கத்தக்க ஒரு தீர்வை பெறுவதற்கான உரிமை உண்டு என்பதோடு, அவர்களக்கு தமது முயற்சிகளில் அடிக்கடி உதவியும் தேவை. மாகாண சபை உஇஆ களின் உரிமைகளுக்கு உடனடி கவனம் செலுத்தி நீடித்து நிலைத்திருக்கும் தீர்வுகளை வகுப்பதோடு, அதிகாரிகளின் பொறுப்புக்களை விதித்துரைத்து இவற்றை அடைவதில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களின் உதவிகளைப்பெறுவதற்கும் வகை செய்யும்.

(தொடரும்...)

## 2,271...

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 498, 694 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,336 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 428, 590 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## குற்றச்சாட்டு...

செயலர் சட்டத்தரணி ராஜீவ் அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குற்றச்சாட்டுக்களின் தீவிரத்தன்மையின் காரணமாக, அவரால் வேறு அமைச்சுப் பதவியை வகிக்கவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றவோ முடியாது.

குற்றச்சாட்டுக்கள் குறித்து முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கைதிகளைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பு என்பதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

சட்டமா அதிபர் உள்ளிட்ட சட்ட நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றுள்ளது. (ம-3)

## நாட்டில் மேலும்...

விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,817 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 57 பெண்களும் 61 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## தமிழ் அரசியல்...

தீவு மாவட்டத்தினைச் சேர்ந்தவர் என்றும் எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு எந்தவித வழக்கு விசாரணையும் இன்றி தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிப்பிற்கமைய விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது. (ம-3)

## காங்கேசன்...

அவரது தலையில் காயம் காணப்படுவதாகப் பொலிஸார் கூறினர்.

அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் விசாரணைகளை முன்னெடுத்து கொலையாளிகளைக் கைது செய்யுமாறும் உறவினர்கள் காங்கேசன்துறை பொலிஸாரிடம் கேட்டுள்ளனர். அதனால் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த ம.ஜெனுசன் (வயது-24) என்ற ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை முதன்மை வீதியின் ஓரமாக ஒருவர் வீழ்ந்து கிடந்துள்ளார். அவரை மீட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்த்தபோது, உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

சம்பவ இடத்தில் அவரது மோட்டார் சைக்கிள் வீதியில் தரித்து நின்றுள்ளது.

சம்பவத்தையடுத்து அங்கு திரண்ட உறவினர்கள் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இறுதிக் கிரியை வீடொன்றில் சிலருடன் அவர் முரண்பட்டுக் கொண்டார் என்றும் அவர்களே கொலை செய்துள்ளனர் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு மோப்பநாயுடன் தடயவியல் பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர். ஆரம்ப விசாரணைகளின் பின்னரே காரணம் கண்டறிய முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

## மேலும் ஒரு...

ஒருவர் கொரோனாத் தொற்றிற்கிலக்காகி உயிரிழந்துள்ளார்.

கட்டுகஸ்தோட்ட, மாவில்மட பகுதியில் வசிக்கும் வைத்தியர் ஜைத் ரஃபைதீன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட அவர், ஒகஸ்ட் 18 அன்று பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவர் கடந்த மூன்று வாரங்களாக தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார். அவரது உடல் நேற்று மட்டக்களப்பு ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டது. (ம-3)

## இன்று தீர்மானம்...

கோவிட் தடுப்பு செயலணிக் கூட்டத்தின் போது எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், இலங்கை விசேட வைத்தியர்கள் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்து நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை மேலும் நீடிக்க வேண்டும் எனக் கோரியுள்ளது.

இலங்கை கோவிட் பரவலில் சிவப்பு வலயத்தில் உள்ளதாகவும் இது பச்சை வலயமாக மாறும் வரையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இன்று இடம்பெறும் கூட்டத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும் சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான வயதெல்லை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 225 பேர்...

மாகாணத்தில் 6 ஆயிரத்து 667 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 225 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் ஒகஸ்ட் மாதத்தில் 228 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்த நிலையில் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 15 நாட்களில் 225 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் சுகாதாரத் துறையின் அறிக்கையின்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 42 தொற்றாளர்களும் வவுனியா மாவட்டத்தில் 59 தொற்றாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 64 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 25 தொற்றாளர்களும் மன்னாரில் 10 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 பேரும் வவுனியா மாவட்டத்தில் 4 பேரும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா இருவரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

2020 மார்ச் தொடக்கம் நேற்று முன்தினம்வரை வடக்கு மாகாணத்தில் 33 ஆயிரத்து 737 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 634 பேர் கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

அதிகப்படியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 618 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 356 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-3,33)

*(நேற்றுக்காலை சுகாதாரத்துறையில் விடுத்த அறிக்கையின்படி)*

## சமூகத்தில்...

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் சென்று தமிழ் அரசியல் கைதிகளுடன் அநாகரிகமாகவும் அச்சுறுத்தலாகவும் நடந்து கொண்டதன் பின்னர் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று சிறைச்சாலைக்கு சென்று கைதிகளுடன் உரையாடியுள்ளார்.

"கைதிகள் குழு தன்னுடன் ஒரு சந்திப்பைக் கோரியதை அடுத்து அவர்களைச் சந்தித்தேன். அதன்படி, கைதிகளின் கவலைகள் குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்ட வுடன் அவர்களின் மறுவாழ்வு மற்றும் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட அவர்களின் பிரச்சினைகளை நான் கவனிப்பேன் என அவர்களுக்கு உறுதியளித்தேன்" என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பொலிஸ்மா...

மரத்னவக்கு பணித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சாட்சிகளின் அடிப்படையில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அடுத்த வாரம் ஐ.நா பொதுச் சபைக்கு செல்வதற்கு முன்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## புலிகளைக்...

கியை வைத்து மிரட்டுகின்றார்.

இது மிகவும் இழிவான செயலாகும். துணிச்சலற்ற, முதுகெலும்பற்ற நபர்களே இவ்வாறான செயல்களில் ஈடுபடுவார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் சட்டநடவடிக்கை என்னவென்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

தற்போதைய அரசாங்கத்தினால் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பலர், அரசாங்கத்தின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்து அவர்களாகவே விலகிச் செல்கின்றார்கள்.

குறிப்பாக மிகவும் திறமையான சிரேஷ்ட வைத்திய நிபுணர்கள் கோவிட்-19 வைரஸ் பரவல் தொடர்பான தொழில்நுட்பக்குழுவிலிருந்து விலகி வருகின்றார்கள்.

தற்போதைய அரசாங்கத்தினால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன் மிகக் குறுகிய காலத்திலேயே பதவி விலகிச் செல்கின்றார்.

இவ்வாறு அரசாங்கத்தை ஆட்சிபீடமேற்றுவதற்காக முனைப்புடன் செயற்பட்ட புத்திஜீவிகள், விசேட நிபுணர்கள் பலரும் இப்போது வெகுவாக அதிருப்தியடைந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு பதவிகளுக்கும் தகுதிவாய்ந்தவர்களை நியமிப்பதன் ஊடாகவே நாட்டை முன்னேற்ற முடியும்.

மாறாக போதைப்பொருள் வர்த்தகர்களையும் துப்பாக்கியைக் காண்பித்து அடாவடித்தனத்தில் ஈடுபடுவோரையும் நியமிப்பதன் மூலம் எதனையும் செய்ய முடியாது என்றும் குறிப்பிட்டார். (ம-3)

## பருத்தித்துறை...

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஊடாக பெறப்பட்ட அவருடைய பிசிஆர் மாதிரிகள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டன.

அவருக்கு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ். - 26...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் 278 பேருக்கு நேற்று பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில்,

**யாழ்.மாவட்டத்தில் 26 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 11 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 03 பேர், யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் ஒருவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் 03 பேர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 பேர்**

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 05 பேர், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர், முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவர்.

**வவுனியா மாவட்டத்தில் 10 பேர்**

செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் 07 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், வவுனியா விமானப்படை முகாமில் ஒருவர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்.

மன்னார் மாவட்டத்தில் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# நாட்டுக்கு வருகைதரும் தடுப்பூசி பெற்ற இலங்கையர்கள்

## பிசிஆர் பரிசோதனைக்காக ஹோட்டலில் தங்கத்தேவையில்லை

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் கோவிட் -19 தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் எடுத்த இலங்கையர்கள் பிசிஆர் பரிசோதனைக்காக ஹோட்டலில் தங்க வேண்டிய அவசியமில்லை என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் சுகாதார நிலைமைகளை ஆராய்ந்து, சுற்றுலா உட்பட நாட்டின் அத்தியாவசிய பகுதிகளில் சில தளர்வுகள் இருக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

நேற்று சுகாதார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய போக்கையும் நாட்டின் முக்கிய வருமான ஆதாரமாக இருக்கும் சுற்றுலாத்துறையையும் மேம்படுத்துவது அவசியம் என்றும் அதற்காக சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க அதிகபட்ச சாத்தியமான திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

"இலங்கைக்கு வரும் தடுப்பூசி போடப்பட்ட இலங்கையர்கள் பிசிஆர் பரிசோதனைக்காக ஹோட்டலில் தங்க வேண்டிய அவசியமில்லை.

நாட்டுக்கு வருகை தந்தவுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவர்கள் பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

புதிய திட்டம் அடுத்த வாரம் தொடங்கும். தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவு கிடைத்தால், விமான நிலையத்தில் இருந்து வருபவர்கள் வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அதன்படி, நாட்டுக்கு வருகை தரும் இலங்கையர்கள் பிசிஆர் சோதனைக் காலத்தில் ஹோட்டலில் தங்குவதற்கு பணம்செலுத்த வேண்டியதில்லை. அதே நேரத்தில் இந்த நடவடிக்கைக்கு செலவிடப்பட்ட நேரமும் குறைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, இறப்புகளின் எண்ணிக்கை மற்றும் ஓட்சிசனின் பயன்பாடு ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் சில தளர்வு எதிர்பார்க்கப்படுகிறது" என்றும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் சுற்றுலாத் துறை தொடர்பாக தற்போது செயற்படுத்தப்படும்பெரும்பாலான சுகாதார வழிகாட்டுதல்கள் நாட்டில் தடுப்பூசித் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு செயற்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

அதன்படி, வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (ம-03)

# கொடிகாமம் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

## கொலை என உறவினர்கள் தெரிவிப்பு விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொடிகாமம் - காரைக்காட்டு வீதியில் வீதி விபத்தில் இறந்ததாகக் கூறப்படும் இளைஞன் வீதி விபத்தில் இறக்கவில்லை எனவும் அது திட்டமிட்ட கொலை என இளைஞனின் குடும்பத்தார் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி இரவு கொடிகாமம் - கோயிலாமனை பகுதியைச்சேர்ந்த இ.நவர்ணன் (வயது-24) என்ற இளைஞன் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இந்நிலையில் இளைஞனின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாக அவருடைய பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருக்கின்றனர்.

குறித்த விடயம் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்ட நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் யாழ்ப்பாணத்தில் உள்ள மரண விசாரணை அதிகாரி ஊடாக மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார். (ம-03,33)

# தற்போதைய கோவிட் நிலைமையானது எம்மால் ஈடுகொடுக்கக் கூடியதல்ல

## வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத்



(கொழும்பு)

நாட்டில் நாளாந்தம் சுமார் 2,300 தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்ற நிலைமையானது எம்மால் ஈடுகொடுக்கக் கூடியதல்ல. நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கை 100 ஐ விட குறைவடையும் வரை சுகாதார கட்டமைப்பின் நெருக்கடி குறைவடையாது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நேற்று முன்தினம் புதன்கிழமை 2,314 கோவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். நாளாந்தம் இவ்வாறு சுமார் 2,300 தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்ற நிலைமையானது எம்மால் ஈடுகொடுக்கக் கூடியதல்ல. இந்த எண்ணிக்கை எம்மால் ஈடுகொடுக்கக்கூடியதை விட அதிகமாகும். இதனை மேலும் கீழ் மட்டத்திற்கு கொண்டு வர வேண்டும். ஒரு தொற்றாளர்கூட நாட்டினுள் இனங்காணப்படாமல் வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கு மாத்திரமே தொற்றுறுதி செய்யப்பட்ட காலம் ஆரம்பத்தில் இலங்கையில் காணப்பட்டது.

தற்போதுள்ள நிலைமையை அந்தக் கட்டத்திற்கு கொண்டு செல்வது எந்தளவிற்கு வெற்றியளிக்கும் என்பது எமக்கு தெரியாது. எனினும் அதன் பின்னர் நாளாந்தம் சுமார் 100 தொற்றாளர்களே இனங்காணப்பட்ட காலம் காணப்பட்டது. அந்த நிலைமைக்கு மீண்டும் சென்றால் மாத்திரமே எம்மால் வழமைக்கு திரும்ப முடியும். இந்த நிலைமையானது கோவிட் கட்டுப்படுத்தலில் எவ்வித பாதக தாக்கத்தையும் செலுத்தாது என்றார். (ம-03)

## கோவிட் தொற்றால்

# முன்னாள் கிராம அலுவலர் வவுனியாவில் உயிரிழப்பு

(வவுனியா)

முன்னாள் கிராம அலுவலரும் ஈபிஆர்எல்எப் கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினருமான பஞ்சாட்சரம் உமாபதி கோவிட் தொற்றால் நேற்று மரணமடைந்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நீண்டகாலமாக கிராம அலுவலராக கடமையாற்றிஓய்வு பெற்ற பின்னும் சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டவருமான பஞ்சாட்சரம் உமாபதி கோவிட் தொற்றுக் காரணமாக சிகிச்சை பலனின்றி வவுனியா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, இவரது தாயார் கடந்த 2 ஆம் திகதி கோவிட் தொற்றுக் காரணமாக மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03,250)

# வெடுக்குநாறி பகுதியில் இராணுவப் பிரசன்னம்

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதியில் அதிகளவான இராணுவப் பிரசன்னம் காணப்படுவதாகத் தெரிவித்த பிரதேச மக்கள் அங்குள்ள சில விக்கிரகங்களும் சேதப்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

ஆலயத்தை நோக்கி உழவியந்திரங்களில் பௌத்த தேரர்கள் அமரும் கதிரை உட்பட்ட பொருட்கள் இராணுவத்தினரால் எடுத்துச்செல்லப்படுகின்றது.

எமது ஆலயத்தை பௌத்தமயமாக்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நாம் எண்ணுகின்றோம். இது தொடர்பில் அரசியல் தலைவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-03)

வீடு (நாள்/மாத) வாடகைக்கு

செம்மணி வீதி, நல்லூரில் வெயிலுகந்த பிள்ளையார் கோவிலுக்கு அருகில் வீடு நாள்/ மாத வாடகைக்கு உண்டு.

077 444 6963

## விடுதலைப் புலிகளுக்கு எதிராக

# போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படக்கூடாது

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போர்க்குற்றவிசாரணை மேற்கொள்ளப்படக்கூடாது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தரப்புக்கள் 3 கடிதங்கள் அனுப்பியுள்ளன.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் 5 கட்சிகள் கையெழுத்திட்டு ஒரு கடிதம் அனுப்பினோம். இரா.சம்பந்தன் ஒரு கடிதம் அனுப்பினார். இன்னொரு கடிதமும் அனுப்பப்பட்டது. நாம் அனுப்பிய கடிதத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்குமிடையில் சம்பந்தமில்லை என இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

மற்றைய கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதனும் நானும் அதையே கூறியிருந்தோம். எனினும் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் சந்திப்பை நடத்தி ஆவேசமாக பேசிய சுமந்திரன், இரா.சம்பந்தன் கடிதம் எழுதுவதை தெரிந்து கொண்டு, அதை மீறி நாம் கையெழுத்திட்டதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் உண்மையில் அப்படி நடக்கவில்லை. நாங்கள் கையெழுத்திட வேண்டிய ஒரு கடிதமெனில், அதை எழுத தொடங்கும்போதே இரா.சம்பந்தன் எமக்கு தகவல் தந்துவிடுவார்.

ஆனால் இந்தக் கடித விவகாரத்தில் கடைசிவரை எனக்கு ஒரு தகவலும் தரப்படவில்லை. எம்மை துரோகிகள், காட்டிக் கொடுத்தவர்கள் என்றும் சுமந்திரன் கூறியிருந்தார்.

சுமந்திரன் தயாரித்த கடிதத்தில், தருஸ்மன் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட புலிகளும் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட பகுதிஇணைக்கப்பட்டுள்ளது. அது அவர்களின் நிலைப்பாடு. நாங்கள் தமிழ்த் தரப்பாக இருந்து கொண்டு, நாங்களே எங்களை விசாரிக்கக் கோருவது எவ்வளவு புத்திசாலித்தனம் என எனக்குத் தெரியவில்லை என்றார். (ம-03)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.